Registered as a news paper.

இலவசப் பிரதி

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 26 (30.03.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :178

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்

(சி-648)

(1962 முதல் யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)



தேசியத் தலைவருடன் அரசியல் விவகாரக் குழுவினர்.



புறப்படுமுன், அரசியற்துறைப் பொறுப்பாளர் சகிதம் குழுவினர்.

# அரசியல் விவகாரக் குழுவினர் கிளிநொச்சியிலிருந்து புறப்பாடு!

மேற்கு நாடுகளில் நடைமுறையில் உள்ள சமஷ்டி ஆட்சிமுறை மற்றும் ஆட்சி அதிகாரம் தொடர்பான நிலைமைகள் பற்றி அறிந்து கொள்வதற்காக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழு நேற்று அதன் பயணத்தை ஆரம்பித்தது.

16 உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவினர் கிளிநொச்சியிலிருந்து நேற்றுக்காலை தமது பயணத்தை ஆரம்பித்தனர்.

நேற்றிரவு கொழும்பு சென்ற இவர்கள் பின்னர் அங்கிருந்து மேற்கு நாடுகளுக்கு தமது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

நோர்வே, கனடா, சுவிஸ், ஜேர்மனி, லண்டன் ஆகிய நாடுகளில் தெரிவான ஐந்து உறுப்பினர்கள் இவர்களுடன் இணைவார்கள்.

இக்குழுவில் அங்கம் வகிப்பவர்கள் வருமாறு,

சீவரட்ணம் பிரபாகரன், நல்லதம்பி சுதன், ஜெயானந்தன் திவாகர், மீனாட்சி சுந்தரம் சிவபாலன், கிட்ண பிள்ளை ஜெயபிரகாஷ், கணநாதன் ராஜ்கண்ணா, கந்தையா சுரேந்திரன், பேரின்பநாயகம் சிவபரன், சீனித

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரசவவலியால் துடித்த பெண்ணுக்கு உதவிய மருத்துவப் பிரிவுப் போராளி

(கிளிநொச்சி)

பஸ்ஸில் பயணித்தபோது திடீரென பிரசவ வேதனை ஏற்பட்டதால் வலியால் துடித்த பெண்ணொருவர், விடுதலைப் புலிகளின் மருத்துவப் போராளி ஒருவரால் சமயத்தில் காப்பாற்றப்பட்டார்.

கொழும்பிலிருந்து முல்லைத்தீவு - மாத்தளன் பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த மேற்படி பெண், புளியங்குளம் - நெடுங்கேணி வீதி வழியாக பஸ்ஸில் பிரயாணம் செய்த போது - நயினாமடுவுக்கும் குளவி சுட்டானுக்கும் இடையே அவருக்குத் திடீரென பிரசவவலி ஏற்பட்டது.

அவ்வேளை - அதிர்ஷ்டவசமாக - அதேபஸ்ஸில் பயணஞ்செய்த தியாகதீபம் திலீபன் மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவப் போராளியான தில்லைநம்பி - தேவையான உபகரணங்கள் இல்லாத நிலையிலும் - அப்பெண்ணுக்கு உரிய சிகிச்சைகள் அளித்து பிரசவத்துக்கான

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஆட்களைக் கடத்தி சிறுநீரகத் திருட்டு

## கொழும்பில் அம்பலமானது

(கொழும்பு)

கொழும்பு - உறுகொடவத்தவில் ஐக்கிய தேசியக் கட்சியின் மிக முக்கியமான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஆதரவில் இயங்கிய - ஆட்களைக் கடத்திச்சென்று சிறுநீரகங்களை திருடும் கோஷ்டியொன்றின் செயல்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

உறுகொடவத்த பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து - ஆபாசப்படம் எடுப்பதற்காகக் கடத்தப்பட்டிருந்த சிறுமியொருத்தி அப்பகுதி மக்களால் மீட்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்தப் பாரிய மோசடி வெளிச்சத்துக்கு வந்தது.

குறிப்பிட்ட சிறுமி வீடொன்றில் கை, கால்கள் சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு, அப்பகுதி மக்களால் மீட்கப்பட்டபோது - பொலிஸாருக்கும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



கொழும்பு வரவர நல்லாத்தான் முன்னேறுது பாத்தியளே!

# முப்படையிலும் தனியான புதிய உளவுச்சேவைகள்

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்பு

(கொழும்பு)

**இராணுவம், விமானம், கடற்படை ஆகிய முப்படைகளிலும் புதிதாக உளவுச் சேவைகளை அறிமுகப்படுத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு அமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளார்.**

இந்த உளவுச் சேவைகள் மூலம் பெறப்படும் தகவல்களில் உண்மை இல்லாதவிடத்து, அவற்றை நிராகரிக்குமாறு பாதுகாப்பு அமைச்சருக்கு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த உத்தரவை பிறப்பிப்பதற்கு - வன்னி, மட்டக்களப்பு மாவட்டங்களில் வாழ்ந்த 55 ஆயிரம் குடும்பங்களுக்கு, கடந்த பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு இராணுவம் சட்டவிரோதமாகத் தடைவிதித்தது தொடர்பாக உயர்நீதிமன்றம் அறிவித்த தீர்ப்பே காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# நகரில் படைமுகாம் அமைக்கும் முயற்சி எதிர்த்து கடற்தொழிலாளர் போராட்டம்

## விரைவில் நடத்தத் தீர்மானம்

யாழ். நகரப் பகுதியில் புதிய முகாம் அமைக்கும் பணியானது தமிழ் மக்களிடையே இயல்புநிலையைப் பாதிக்கும் ஒரு செயலெனக் கண்டித்து இன்னும் ஓரிரு தினங்களில் கடற்தொழிலாளர்கள் அனைவரும் இணைந்து பாரியளவில் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

யாழ்.நகரின் இதயப் பகுதியான மாநகரசபைக் கட்டடம், யாழ்ப்பாணக் கோட்டை, அதனுடைய சுற்றுப்புறம், வாடிவீடு, நீதிமன்றம், சுப்ரமணியம் பூங்கா ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும், பாரிய இராணுவ முகாம் அமைக்கும் பணி உடனே நிறுத்தப்பட வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டு மீண்டும் வாபஸ்பெறப்பட்ட ஐஸ் தொழிற்சாலை புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க அனுமதிக்க வேண்டும் என்று கோரியும் இன்னும் ஓரிரு தினங்களில் கடற்தொழிலாளர்கள் சமூகம் பாரியளவிலான போராட்டம் ஒன்றினை நடாத்தவுள்ளது. (சு)

# அமைச்சர்கள் பாதுகாப்பை நீக்குவதற்கு பிரதமர் முடிவு

## படையினர் பிரசன்னமும் குறைக்கப்படுமாம்

(கொழும்பு)

உயிருக்கு அச்சுறுத்தல் இல்லாத அமைச்சர்களின் பாதுகாப்பை உடனடியாக நீக்குவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானம் எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களின் பாதுகாப்பைக் கருதி பல வாகனங்கள் பாதைகளில் செல்வதையும் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் பங்குபற்றும் நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்களில் படையினரை உடன் அழைத்துச்செல்வதை நிறுத்துவதற்கும் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021 - 2223916, 0777 - 517019

(சி-626) 01-505632, 074-612656, 01-390128

# தமிழினம் நிமிர்ந்து நிற்பதற்கு ஒரே தலைமைதான் வேண்டும்!

## ஆனந்தசங்கரிக்கு ரெலோ சிறிகாந்தா பதில்



தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் என்று நாம் ஒருபோதும் சொல்லவில்லை என, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கருத்துத் தெரிவித்து வருவது, சர்வதேச மட்டத்தில் தமிழ்த் தேசிய இனத்தின் நிலைப்பாட்டிற்குப் பாரதூரமான தீங்கை ஏற்படுத்தக்கூடியதென, ரெலோ முதல்வர் சிறிகாந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள ரெலோ அலுவலகத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றினை நடத்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் 'தெரிவிக்கையில்-

தமிழீழ விடுதலைப் புலிகள்தான் த்மிழ்த் தேசிய இனத்தின் ஏகப்பிரதிநிதிகள் என்ற நிலைப்பாட்டிலேயே கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஸ் அணி), ரெலோ ஆகிய கட்சிகள், கூட்டமைப்பை உருவாக்கித் தேர்தலில் போட்டியிட்டோம். இதற்கு மக்கள் ஓர் தெளிவான ஆணையை முன்வைத்தார்கள்.

தமிழ்த்தேசிய இனத்தின் பிரச்சினை - எமது மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை திருப்திப்படுத்தக்கூடிய ஓர் அரசியல் தீர்வின் ஊடாக, நீதியாகவும் நிரந்தரமாகவும் தீர்க்கப்படுகின்றவரை, தமிழ்த் தேசிய இனத்தின் ஏகபிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரம்தான் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு.

இனப்பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்னர் ஏற்படும் சமாதான ஜனநாயகச் சூழலில் எத்தனை கட்சிகளும் செயற்படலாம். அரசியலுக்கு எவரும் வரலாம், போகலாம். இது தான் ஜனநாயக மரபு. ஆனால், அதுவரை தமிழ்த் தேசியஇனம் ஒரேகொடியின் கீழ், ஒரே அரசியல் தலைமைத்துவத்தின் கீழ், ஒன்றுபட்டிருக்கவேண்டும். இது காலத்தின் கட்டாய தேவை.

தமிழினத்தின் தரப்பிலே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தவிர வேறு எந்தவொரு அமைப்போடும் பேச்சுவார்த்தைகள் நடைபெறக் கூடாது, நடைபெறமுடியாது என்பதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த தேர்தலில் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது.

ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சில முக்கிய பிரமுகர்கள் அண்மையில் தெரிவித்திருக்கும் சில கருத்துக்கள், மேற்படி விடயத்தில் தமிழ்மக்கள் மத்தியில் சில சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது. ஆனால், தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் தான் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை.

இப்படியிருக்கையில், கூட்டணித் தலைவர்கள் மாறுபட்ட கருத்துக்களை ஏன், எதற்குத் தெரிவித்தனர் என்பது எமக்குப் புரியவில்லை. ஆனால், 'இத்தகைய கருத்துக்கள் சர்வதேச மட்டத்தில் இலங்கைத் தமிழ்த் தேசிய இனத்தின் நிலைப்பாட்டிற்கு பாரதூரமான தீங்கினை ஏற்படுத்தக்கூடியவை.

தமிழீழ விடுதலைப் புலிகள் தான் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள் என, கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பில் உள்ள நான்கு தமிழ்க் கட்சிகளும் மேடை மேடையாகப் பிரசாரம் செய்து வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்குச் சென்றன. இதன் பின்னர் அர்த்தமற்ற கேள்விகளை எழுப்புவது விஷமத்தனமானது. இந்த நிலைமைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைத்தேயாக வேண்டும்.

இதேவேளை, உப சபாநாயகர் பதவி தொடர்பாகவும் சில சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்திற்குச் சென்றிருப்பது, அரைச் சபாநாயகர் பதவியையோ அல்லது முழுச் சபாநாயகர் பதவியையோ பெற்றுக் கொள்வதற்காக அல்ல. மாறாக, எமது மக்களுடைய அரசியல் நீதி கோரி நீண்ட நெடுங்காலமாகப் போராடி வந்திருக்கும் எமது மக்களுடைய உணர்வுகளை, அந்த நாடாளுமன்றத்தில் எதிரொலிப்பதற்காகவே எமது பிரதிநிதிகள் அங்கு அனுப்பப்பட்டனர்.

எனவேதான், எமது நாடாளுமன்ற உறுப்பினர்களில் எவரும் எந்தவொரு பதவியையும் பெற்றுக் கொள்வதை தமிழினம் அனுமதிக்க முடியாது. சுதந்திர இலங்கையின் 56 வருட கால வரலாற்றில், கடந்த கால தமிழ் அரசியல் தலைவர்களில் பலர், பதவிகளைப் பெற்றுக் கொண்டு இலட்சியப் பாதையிலிருந்து குப்புற விழுந்த வரலாறுகளை நாம் மறந்துவிடவில்லை.

எமது மக்கள் இப்போதும் நிர்க்கதியான நிலையில்தான் உள்ளனர். இந்த நிலையில், எமது பிரச்சினை தீர்க்கப்படுகின்றவரை, எந்தவொரு பதவியைப் பற்றியும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிந்திக்க முடியாது. எனவேதான் உப சபாநாயகர் பதவியைக் கூட்டமைப்பின் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஏற்றுக்கொள்வதை நாம் ஆமோதிக்கவும் மாட்டோம் அனுமதிக்கவும் மாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- புலிகள் கொண்டுவரும் அரசியல் தீர்வை நாம் ஏற்பதாகச் சொல்லியிருக்கிறோம். நாம் இந்த அரசியல் தீர்வில், இந்த விடயம் உள்ளடக்கப்படவேண்டும், அந்த விடயம் உள்ளடக்கப்பட வேண்டும் என்று கூறுகிறோமா? இல்லை. ஏனெனில், அந்தக் காலமெல்லாம் முடிந்துவிட்டது. தமிழினத்திற்குத் தீர்வு கிடைக்க வேண்டுமானால், தமிழினம் ஓர் தனி மனிதனைப்போல் கருங்கற்பாறையாக நிமிர்ந்து நிற்கவேண்டும். அதற்கு ஒரே தலைமைதான் இருக்க வேண்டும். ஒரே கொடிதான் இருக்க முடியும். ஒரே தலைவர்தான் இருக்க முடியும். இவற்றுக்கெல்லாம் உரியதுதான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம். ஆனால், தீர்வு வரும் எனில் எமது மண்ணை நாமே நிர்வகிக்கவேண்டி ஏற்படும். எமக்கென்று ஒரு சட்டமன்றம் இருக்கும். இதில் பல கட்சிகள் போட்டியிடலாம். இதில் பிரச்சினை இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்றால், இனிவரும் சகல காலத்திற்கும் புலிகள்தான் ஏக பிரதிநிதிகள் என்றல்ல. இதைப் புரிந்துகொள்ளவேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்வரை நாம் எல்லோரும் ஒரே குரலாகத்தான் இருக்க வேண்டும் என்பது யதார்த்தமான நிலைமை. தமிழினத்தின் தரப்பிலே ஒரே குரல் தான் பேசவேண்டும். ஒரே குரலில் தான் பேசவேண்டும். இது நாங்கள் ஜனநாயகத்திற்கு வந்த பிற்பாடு - 1988 ஆண்டுக்குப்பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழினம் தொடர்பாக எடுத்து வந்திருக்கின்ற அணுகுமுறை. அனைத்தையும், அனுபவரீதியாக சந்தித்த பிறகு சிந்தித்துவந்த முடிவு. இது திடீர் முடிவல்ல. இதை நாம் 1994 ஆம் ஆண்டில் இருந்தே சொல்லிக்கொண்டு வருகிறோம். இந்த நிலைப்பாட்டில் தான் எல்லோரும் சேர்ந்து கூட்டமைப்பை அமைத்தோம். இதில் ஏக பிரதிநிதிகள் என்ற வார்த்தை பாவிக்கப்படவில்லையே தவிர அர்த்தம் அது ஒன்றுதான். இந்த நேரத்தில் நாம் ஒரு சக்தியாக எழுந்து நின்று, எங்களுடைய சார்பிலே தீர்வொன்றை வென்றெடுப்பதற்கான பேச்சுவார்த்தை மேசையில், நீதியான அரசியல் தீர்வொன்றினை பறித்தெடுக்கக்கூடியதான பலம் யாரிடம் இருக்கின்றது என்பதை சிந்திக்க வேண்டும்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பிலுள்ள எந்தவொரு கட்சியும் தனித்துப் போட்டியிட முடியாது. அப்படி எதுவும் நடக்குமாயின் மக்கள் செருப்பால் தான் அடிப்பார்கள்.

கடந்த பொதுத்தேர்தலில் - புலிகள தான் எமது ஏக பிரதிநிதிகள் என்ற அங்கீகாரத்தை மக்கள் வழங்கியுள்ளனர். இன்னும் சொன்னால் போராடிக்கொண்டு இருக்கின்ற இயக்கம், தேர்தலில் போட்டியிடாமல் மக்களுடைய அங்கீகாரத்தைப் பெற்றமை அரசியல் புதுமை எனவும் அவர் தெரிவித்தார்.


# எக்ஸ்போ ஏவியேஷன்

இல. IE, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே. - 021-2223891, 071-348888, 071-349999, 0777-730666

காலைநேர விமான சேவை

| கிழமை | புறப்படல் இரத்மலானை | வந்தடைதல் பலாலி | புறப்படல் பலாலி | சென்றடைதல் இரத்மலானை |
|---|---|---|---|---|
| திங்கள், செவ்வாய், புதன் | 06.30 | 07.30 | 08.15 | 09.15 |
| வெள்ளி | 10.45 | 11.45 | 12.30 | 13.30 |
| சனி | 08.15 | 09.15 | 10.00 | 11.00 |

மாலைநேர விமான சேவை

| | | | | |
|---|---|---|---|---|
| செவ்வாய் | 12.45 | 13.45 | 14.30 | 15.30 |
| வெள்ளி, சனி | 16.00 | 17.00 | 17.45 | 18.45 |
| ஞாயிறு | 14.00 | 15.00 | 15.45 | 16.45 |

குறிப்பு:- புதிய நேர அட்டவணைக்கேற்ப பயணிகள் தமது மீள் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

☆ குளிரூட்டப்பட்ட இலவச போக்குவரத்து

யாழ். - பலாலி - யாழ்.

கொட்டாஞ்சேனை - இரத்மலானை - கொட்டாஞ்சேனை

☆ வெளிநாட்டுப் பிரஜைகளுக்கும், உள்நாட்டுப் பிரஜைகளுக்கும் ஒரே வகையான கட்டணமே அறவிடப்படுகிறது.

ஒருவழி - 2425/-

இருவழி - 4550/-

(சி-720)


# ஜீ.ரி.இசற் உதவியுடன் வீடமைப்புத் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாண மாவட்டத்தைப் புனரமைக்கும் திட்டமொன்று ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிறுவனம், தொழில்நுட்ப உதவியை வழங்குகின்றது. அத்துடன் தேவையான கட்டடப் பொருட்களையும் வழங்க முன்வந்திருக்கின்றது.

புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சு இதற்கான நிதியுதவிகளை வழங்குகின்றது.

யுத்தத்தால் அழிக்கப்பட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் வீடுகள் இத்திட்டப் பிரகாரம் புனரமைக்கப்படும். குடும்பத் தலைவரை இழந்த குடும்பங்களுக்கு, இந்தப் புனரமைப்புத் திட்டப் பிரகாரம் வீடுகள் வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும் என்று ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

வடக்கில் அளவெட்டியில் இத்திட்டத்தின் கீழ் பல வீடுகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன.

## கரணவாயில் இலவச மருத்துவ முகாம்

கரணவாய் மகா வித்தியாலயத்தில் இன்று காலை 9 மணி முதல் இலவச கண் சிகிச்சை நடைபெறவுள்ளது. வடமராட்சி லயன்ஸ் கழகத்தினர் இம்மருத்துவ முகாமுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

கரணவாய் மகா வித்தியாலய சூழலில் வாழும் மக்களின் நலன் கருதி கண்பார்வை பாதிக்கப்பட்டோர் இங்கு பரிசோதிக்கப்படவுள்ளனர். அத்துடன் நீரிழிவு, இரத்த அழுத்தம் சம்பந்தமான பொது வைத்தியப் பரிசோதனைகளும் இங்கு நடாத்தப்படவுள்ளன. கண்பார்வை குறைந்தோருக்குக் கண்ணாடி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(116)

## மாணவ தாதியர் பயிற்சி விண்ணப்பம்

மாணவ தாதியர் பயிற்சிக்கு சுகாதார அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2000/2001 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையில், விஞ்ஞான நெறியில் சித்தியெய்தியவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். விண்ணப்ப முடிவு திகதி அடுத்த மாதம் 14 ஆம் திகதியாகும்.

விண்ணப்பங்களை, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மத்தியஸ்தர் சங்கக் கூட்டம்

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம், இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தலைவர் கப்டன் குணசிங்கம் தலைமையில் மத்தியஸ்தர் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு செயலாளர் இ.ஆனல்ட் அறிவித்துள்ளார் (119)


நிறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

சரத்குமார், மீனா, வடிவேல் நடித்த

மாயி

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி

HOLLOW MAN

(சி-627)

ராஜா யாழ்ப்பாணம்.

விஜய், ரீமாசென், வடிவேல் நடித்த



பகவதி

10.30, 2.30, 6.30, 9.30

(சி-628)



## பெயர் மாற்ற அறிவித்தல்

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயில் வசிக்கும் தம்பிராஜா மோதிலால் பரதன் ஆகிய நான் எனது பெயரை 19.03.2003 இலிருந்து தம்பிராஜா ரஞ்சன் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் பிரஜைகள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தம்பிராஜா ரஞ்சன்,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(சி/725)


# இன்றைய நாள் இனிய நாள்

**30-03-2003 - ஞாயிற்றுக்கிழமை**
**பிரதோஷ விரதம்**

- **மேடம்** :- புதிய ஸ்தானம், சந்தோஷ மிகுதி, பொருள் வரவு, காரிய வெற்றி, குடும்ப மகிழ்ச்சி.
- **இடபம்** :- நினைத்த காரியசித்தி, ஆபரண லாபம், புத்திர களஸ்திர மகிழ்ச்சி, மனப் பயம்.
- **மிதுனம்** :- கொடுக்கல் வாங்கல், சிறப்பின்மை, நிலைமாற்றம், இனசன விரோதம், வாக்குக் கலகம்.
- **கர்க்கடகம்** :- குடும்ப மனஸ்தாபம், பிரயாச மிகுதி, தருமகாரிய சித்தி, பொருட் சேதம், வாக்குக் கலகம்.
- **சிங்கம்** :- விஷ ஜந்துக்களால் பீடை, தேகசுகக் குறைவு, இல்லச் சிறப்பு,. தருமகாரிய சித்தி.
- **கன்னி** :- புத்திர பந்துக்களால் கவலை, வாக்குக் கலகம், அவமானம், பயனற்ற பிரயாசம்.

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

- **துலாம்** :- மனக்கவலை, சத்துரு பீடை, தனித்த நிலை, பெண்களால் கெடுதல், பயனற்ற பிரயாசம்.
- **விருச்சிகம்** :- வாகன சுகம், சந்தோஷ மிகுதி, சுரம் முதலிய ரோக பீடை, தொழில் சிறப்பு.
- **தனு** :- சரீர ஆரோக்கியம், நன்மதிப்பு, சிநேக லாபம், இனசன கொண்டாட்டம்.
- **மகரம்** :- பணக் குறைவு, வீண்பழி கேட்டல், ஏமாற்றப்படுதல், புதிய ஸ்தானம், இல்லச் சிறப்பு.
- **கும்பம்** :- சத்துருக்களால் கவலை, இனசன விரோதம், பெரியோர் மதிப்பு, இல்லச் சிறப்பு.
- **மீனம்** :- தொழில் மூலம் பேரும் புகழும் அடைதல், கோபமிகுதி, அதிக செலவு, இனசன விரோதம்.

# அரசாங்க வெடிபொருள் களஞ்சியம் நுகேகொடவில் வெடித்துச் சிதறியது!

(கொழும்பு)

நுகேகொடப் பகுதியில் இருந்த அரசாங்க வெடிபொருள் களஞ்சியத்தில் நேற்றுமுன்தினம் பாரிய வெடி விபத்து ஏற்பட்டதில் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த அரசாங்க வெடிபொருள் களஞ்சியத்தில் படையினருக்குத் தேவையான வெடிபொருட்களும், பட்டாசுகளுக்கான வெடிபொருட்களும் தயாரிக்கப்பட்டு, களஞ்சியப் படுத்தப்பட்டு வந்ததாக மீரிஹன பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்த வெடிவிபத்துக்கான காரணங்கள் கண்டறியப்படவில்லையென்றும், விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இநத வெடிவிபத்தினால் களஞ்சியக்கட்டடம் முற்றாகச் சேதமடைந்தது என்றும் - உயிரிழப்புக்களோ, காயங்களோ எவருக்கும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலை - கடற்கரையோரத்தில் கடற்படையின் பாதுகாப்பு தீவிரம்

(திருகோணமலை)


திருகோணமலை மாவட்டத்திலுள்ள கடற்கரையோரப் பகுதிகளில் படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் பாதுகாப்புக்குப் பொறுப்பான கடற்படையினரே பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

சாம்பல்தீவுச் சந்தியில் நிலைகொண்டுள்ள கடற்படையினர், போக்குவரத்துச் செய்யும் வாகனங்களை வழிமறித்துச் சோதனை செய்து வருவதாகவும் தெரியவருகிறது.

# ஐரோப்பிய யூனியன் தலைமையை அமைச்சர் மிலிந்த சந்திப்பார்!

(கொழும்பு)



ரோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், ஐரோப்பிய யூனியனும் இணைத் தலைமைதாங்க முன்வந்துள்ளதையடுத்து - அவ்வமைப்பின் தலைமைப் பிரதிநிதிகளை அமைச்சர் மிலிந்த மொறகொட சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் தொடர்பாகவும், அதில் இலங்கைக்குத் தேவையான நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இச்சந்திப்பின்போது விரிவாக ஆராயப்படவுள்ளது.

ஐரோப்பிய யூனியனின் செயலாளர், ஆணையாளர் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளை இவர் சந்தித்துப் பேச்சு நடத்துவார். ஐரோப்பிய யூனியன் இவ்வாறு தலைமைதாங்க முன்வந்திருப்பது சமாதான முயற்சிகளைப் பெரிதும் வலுப்படுத்தும் என்று அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் இருதரப்பு பேச்சுகளில் முன்னேற்றம்

(கொழும்பு)

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தாராள வர்த்தக உடன்பாடு ஒன்றை செய்துகொள்வது தொடர்பான முயற்சியில், பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாக அமைச்சர் ரவி கருணாயநாயக்க தெரிவித்தார்.

அமெரிக்காவுடன் வர்த்தக உடன்படிக்கையைச் செய்துகொள்வது தொடர்பாக முக்கிய நிறுவனங்கள்- அரச அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் கணிசமான முன்னேற்றத்தை எட்டியிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# இனப்பிரச்சனை தொடர்பான நிலைப்பாடு; எட்டுவதில் ஜே.வி.பி-சுதந்திரக்கட்சி இழுபறி

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் இடம்பெற்ற கூட்டணி தொடர்பான சந்திப்பில் தீர்க்கமான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணியை அமைப்பது தொடர்பான பேச்சுக்கள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றன. இந்தப்பேச்சுக்களின்போது, இருகட்சிகளும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது தொடர்பான திட்டம் ஒன்றை வரைவது தொடர்பாக ஆராயப்பட்டது.

இனப்பிரச்சினை தொடர்பாக, பொதுவான தீர்வுத்திட்டம் ஒன்றை உருவாக்குவதில் இந்தச் சந்திப்பில் இணக்கம் எட்டப்படவில்லை. இதனால் தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்துவதென்றும், இறுதியான இணக்கப்பாடு எட்டப்பட்டதும் கூட்டணி தொடர்பான உடன்பாடு செய்து கொள்வதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

# ஆபரண, இரத்தினக்கல் ஏற்றுமதி கடந்த வருடத்தில் அதிகரிப்பு!

இலங்கையின் ஆபரண, இரத்தினக்கல் ஏற்றுமதி கணிசமாக அதிகரித்திருப்பதாக உத்தியோகபூர்வ தகவல்களில் இருந்து தெரியவருகின்றது.

சென்ற வருடங்களுடன் ஒப்பிடுகையில், கடந்த வருடத்தில் பெரும் முன்னேற்றம் எட்டப்பட்டிருக்கிறது. 92 கோடி ரூபாவுக்கு ஆபரணங்களும், 560 கோடி ரூபா பெறுமதியான இரத்தினக்கற்களும், 1803 கோடி ரூபா பெறுமதியான வைரமும் இலங்கையிலிருந்து கடந்த வருடம் ஏற்றுமதி செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



மட்டக்களப்பில் நடைபெற்ற தேசிய பெண்கள் எழுச்சி மாநாட்டின் தொடக்கநாளில் தேசியக்கொடியை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைப்பதை முதற்படத்திலும், பெண் போராளிகள் கொடிமரியாதை செய்வதையும் அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# கண்ணிவெடி அகற்றும் அமெரிக்க குழு தெ‌ன்மராட்சியில் பணியை ஆரம்பிக்கும்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த அமெரிக்கப் ரொங்கோ கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தமது முதற்கட்டப்பணியை- தென்மராட்சிப் பிரதேசத்தில் இன்னும் ஓரிரு தினங்களில் ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

25 பேர் அடங்கிய கண்ணிவெடி அகற்றும் ரொங்கோ நிறுவனம் 4 மோப்ப நாய்களைத் தம்முடன் கொண்டு வந்துள்ளது.

2000 ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேத்தில் இடம்பெற்ற பாரிய யுத்தத்தின்போது, பல பகுதிகளில் விதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் இன்னமும் முழுமையாக அகற்றப்படவில்லை. இதனால், மக்கள் மீளக்குடியமர முடியாத நிலையினைக் கருத்திற்கொண்டே முதற்கட்டப் பணிகளை தென்மராட்சிப்பிரதேசத்தில் ஆரம்பிக்கவுள்ளனர். (34)

## திறப்பு விழா

கட்டுடை சைவ வித்தியாசாலை புதிய கட்டடத் திறப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் த.கடவுள் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதமவிருந்தினராக நடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக விவசாய சம்மேளனத் தலைவர் சி.முதலியார், சேவைக்கால ஆலோசகர் மு.லோகநாதன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# சகாவின் துப்பாக்கிச் சூட்டில் இராணுவச் சிப்பாய் காயம்!

(யாழ்ப்பாணம்)

சகா ஒருவரால் சுடப்பட்ட இராணுவச் சிப்பாய் ஒருவர், படுகாயம் அடைந்தநிலையில் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முகமாலை இராணுவ முன்னரங்க நிலையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக- கொடிகாமம் பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி சிப்பாயைச் சுட்டுக்காயப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டி, ரூபன் செனிவிரத்ன என்ற சிப்பாயைக் கைதுசெய்து, சாவகச்சேரி நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர் செய்தனர். சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

# இளைஞர் படையணிக்கு ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சையில் படை அதிகாரி

தேசிய இளைஞர் படையணியில் இணைத்துக்கொள்வதற்கு - வட்டுக்கோட்டை பிரதேச இளைஞர், யுவதிகளிற்கான நேர்முகப்பரீட்சை நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது.

60 இளைஞர், யுவதிகளிற்கு இந்நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது. மேலதிக அரசாங்க அதிபர், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அதிகாரி ஆகியோருடன் இராணுவஅதிகாரி ஒருவரும் இந்நேர்முகப்பரீட்சையை நடாத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய பிரதேசங்களிலும் கட்டம் கட்டமாக இந்நேர்முகப்பரீட்சை நடைபெறும் எனத்தெரியவருகின்றது.

# அடையாள அட்டை இல்லாதோருக்காக யாழ்ப்பாணத்தில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள் மற்றும் இல்லாதோருக்கு அடையாள அட்டைகளை வழங்குவதற்கான நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதற்கான ஏற்பாடுகளை ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகள் செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அடையாள அட்டை இல்லாதோரும், தொலைந்தோரும் தத்தமது பகுதி கிராம அலுவலர்களுடன் தொடர்புகொண்டு, இது தொடர்பான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறும், பிரதேச செயலர் ஊடாக யாழ். செயலகத்துக்கு இந்த விண்ணப்பங்கள் கிடைத்ததும் நடமாடும் சேவையில் அடையாள அட்டைகள் வழங்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

## பதவியுயர்வு பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

(நெல்லியடி)

தரம்-II "ஆ" விலுள்ள எழுதுநர்களை தரம் - II "அ" வுக்குப் பதவியுயர்த்துவதற்கான பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பரீட்சை விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித்திகதி எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி ஆகும்.

தரம்-II "ஆ" வில் 3 வருட சேவையைப் பூர்த்திசெய்து பதவியில் உறுதிப்படுத்தப்பட்டவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி உள்ளவர்கள்.

அத்துடன், பதவி உறுதிப்படுத்தலை எதிர்பார்த்திருப்பவர்களும்- திணைக்கள தலைவர் அனுமதியுடன் இப்பரீட்சைக்குத் தோற்றமுடியும். அத்துடன் காசாளர், களஞ்சியக்காப்பாளர், தட்டெழுத்தாளர் ஆகியோருக்கும் இப்பரீட்சை பொருந்தப்பாடு உடையதாகும். (13)

# கோட்டே மாநகரசபை கலைப்பு; எதிர்த்து வழக்குத் தாக்கல்!

(கொழும்பு)

கோட்டே - ஜெயவர்த்தனபுர மாநகரசபையின் செயற்பாடுகளை விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தடைசெய்தது, சட்டவிரோதமானது என மாநகரசபையின் முன்னாள் மேயர்- உயர்நீதிமன்றத் தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கோட்டே - ஜெயவர்த்தனபுர மாநகரசபையை, கடந்தவாரம் மேல் மாகாண முதலமைச்சர் போர்ட்டி பிறேமலால் திசநாயக்க, தடைசெய்வதான உத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

இந்த உத்தரவு சட்டவிரோதமான தென்று முன்னாள் மேயரால்- மேல் மாகாண முதலமைச்சர் போர்ட்டி பிறேமலால் திசநாயக்க, ஆளுநர் அலவி மௌலானா, சட்டமா அதிபர் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் முடிவுசெய்துள்ளது.

# நூலக ஆசிரியர் பயிற்சித்திட்டம் திருமலையில் ஆரம்பித்து வைப்பு!

வட-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் - பாடசாலை நூலக ஆசிரியர்களுக்குக்கான பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது. முதற்கட்டமாகத் திருகோணமலை மாவட்ட நூலக ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

ஏனைய மாவட்டப் பாடசாலை நூலக ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் விரைவில் நடத்தப்படவுள்ளன. நூலக ஆசிரியர்களுக்கு விண்ணப்பித்த பாடசாலை ஆசிரியர்களுக்கு மட்டுமே இக்கருத்தரங்கில் அனுமதி வழங்கப்படவுள்ளது.

எனவே, விண்ணப்பிக்காத பாடசாலைகள் உடனடியாக விண்ணப்பிக்குமாறும், நூலக ஆசிரிய விண்ணப்பங்களை அனுப்பிய பாடசாலைக்கே நூலக அபிவிருத்திக்கான உதவிகள் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் என்றும் வட- கிழக்கு மாகாண கல்வித்திணைக்கள நூலக இணைப்பாளர் ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் தட்டுப்பாட்டினால் விவசாய முயற்சிகள் பாதிப்பு

(சரசாலை)

எரிபொருள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தற்போது விநியோகிக்கப்படுவதால், மரக்கறிப்பயிர்களைப் பயிரிட்ட விவசாயிகள் தமது பயிர்கள் நீரின்றி வாடுவதாகக் கவலை தெரிவித்தனர்.

பயற்றை, கத்தரி, மிளகாய், தக்காளி, பாகல் போன்ற பயிர்கள் அறுவடைக்குத் தயாரானநிலையில் உள்ளபோதிலும், எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் ஒழுங்காக நீர் இறைக்கமுடியாமல் வாடி அழியும்நிலையில் உள்ளதாகவும், மரக்கறிகளின் விலைகள் குறைந்துள்ளநிலையில் - அதிகவிலை கொடுத்து எரிபொருள் வாங்கி விவசாயத்தினை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

தமக்குக் கட்டுப்பாடின்றி மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு விவசாயிகள் - தென்மராட்சி பிரதேசசெயலக அதிகாரிகளிடம் கோரிக்கைவிடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

(34)

# கியூடெக் அமைத்துக் கொடுக்கும் 137 வீடுகளின் பணிகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

ஏ-9 பாதை திறப்பின் பின்னர் யாழ். குடாநாட்டில் மீள்குடியேறி வரும் குடும்பங்களுக்குக் கியூடெக் நிறுவனம் தற்காலிகமாகக் குடியேற்றங்கள் அமைத்துக் கொடுத்து வருகின்றது.

ஈ சி எச் ஓ நிறுவனம்- கியூடெக் நிறுவனத்துடன் இணைந்து 32 ஆயிரம் ரூபா பெறுமதிகொண்ட 400 வீட்டுத்திட்டத்தினை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளது. இதன் அடிப்படையில் தற்போது 137 வீடுகளின் வேலைகள் பூர்த்தியடைந்த நிலையில், உரியவர்வர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இளவாலையில் 83 வீடுகளும், நாவற்குழியில் 7 வீடுகளும், மணற்காட்டில் 29 வீடுகளும், பருத்தித்துறையில் 18 வீடுகளும் வேலை முடிந்து உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



கியூடெக்கின் வீடமைப்புப் பணிகளை அதிகாரிகளுடன் பார்வையிடும் அருட்திரு ஜெயக்குமார் அடிகள்.

இதேவேளை- சாவற்காடு, அளவெட்டி, இளவாலை போன்ற பகுதிகளில் பாவிக்க முடியாதபடி தூர்ந்து போயிருந்த 67 கிணறுகள் புனரமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், 74 மலசல கூடங்கள் புதிதாகக் கட்டப்பட்டுள்ளதாகவும் கியுடெக் இயக்குநர் அருட்திரு ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

அத்தோடு, தற்போது கொட்டடி முத்தமிழ் வீதிப்பகுதியில் புதிதாக 50 வீடுகள் கட்டப்படுவதற்கான வேலைப்பாடுகள் ஆரம்பித்துள்ளதாகவும், கட்டப்பணிகள் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பொருட்களைக் கொண்டே மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(சு)

## வலிகாமம் வலய மட்ட

# கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி முடிவுகள்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளின்- இறுதியாட்டங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

வலிகாமக் கல்வி வலயபிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பிரதமவிருந்தினராக வலிகாமம் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்துகொண்டார்.

வலைப்பந்தாட்டம் 15 வயதுப்பிரிவில் - 1 ஆம் இடத்தை - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், 2 ஆம் இடத்தை - உடுவில் மகளிர் கல்லூரியும், 3 ஆம் இடத்தை- விக்ரோறியா கல்லூரியும் பெற்றன.

17 வயதுப் பிரிவில் - 1 ஆம் இடத்தை - இராமநாதன் மகளிர் கல்லூரியும், 2 ஆம் இடத்தை- யூனியன கல்லூரியும், 3 ஆம் இடத்தை- உடுவில் மகளிர் கல்லூரியும் பெற்றன.

19 வயதுப் பிரிவில் - 1 ஆம் இடத்தை - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், 2 ஆம் இடத்தை- யூனியன் கல்லூரியும், 3 ஆம் இடத்தை- மகாஜனாக் கல்லூரியும் பெற்றன.

கரப்பந்தாட்டப் போட்டியில் - 15 வயதுப் பிரிவில் - 1 ஆம் இடத்தை - ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையும், 2 ஆம் இடத்தை - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், 3 ஆம் இடத்தை - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயமும் பெற்றன.

17 வயதுப் பிரிவில் - 1 ஆம் இடத்தை - இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயமும், 2 ஆம் இடத்தை அளவெட்டி அருணோதயாக கல்லூரியும், 3 ஆம் இடத்தை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையும் பெற்றன.

19 வயதுப்பிரிவில் - 1 ஆம் இடத்தை - ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலையும், 2 ஆம் இடத்தை - மகாஜனாக்கல்லூரியும், 3 ஆம் இடத்தை- இணுவில் மத்திய கல்லூரியும் பெற்றன.

இப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகள் யாழ். மாவட்ட மட்டத்திலான போட்டிகளில் கலந்துகொள்ளும்.

(118)

# அரசு தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தை இராணுவ மயப்படுத்தியே வருகிறது!

## வலிகாமம் கடற்புலிகளின் பொறுப்பாளர் இனியவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 10 ஆம் திகதி சர்வதேசக் கடற்பரப்பில் கடற்படையினரின் தாக்குதலில் வீரமரணமடைந்த 11 போராளிகளினதும் இழப்பு, போராட்ட வரலாற்றில் ஈடுசெய்ய முடியாத ஓர் பெரிய இழப்பு என வலிகாமம் பிரதேச கடற்புலிகளின் பொறுப்பாளர் கு.இனியவன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கடற்தொழிலாளர் சமாசத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் உரையாற்றுகையில், இன்றைய அரசியல் போக்குக்குறித்து நாம் அனைவரும் பூரண தெளிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். யுத்தநிறுத்த உடன்படிக்கை என்பது விடுதலைப்புலிகளின் அமைப்பைக் கட்டிப்போட்டுள்ளது. பொதுமக்களின் செயற்பாடுகள்தான் எமது போராட்டத்தையும், மக்களது விடுதலையையும் பெற்றுத்தரும் என்பதை அனைவரும் நம்பியுள்ளோம். கடற்படையின் இது போன்ற செயலுக்கு நாம் பதில் நடவடிக்கை செய்திருந்தால் அதன் விளைவுகள் மக்களைப் பாதித்திருக்கும்.

20 வருட போராட்டத்தின் பின் இன்று சமாதானம் என்ற பாதையில் இறங்கி, அதனை முன்னெடுத்துச் செல்கிறோம். நாம் வன்னிக்கு அழைக்கப்பட்ட ஒன்பது நாட்களுக்குள் தேசவிரோதக் கும்பலொன்று குடாநாட்டில் மிகத்தீவிரமாகச் செயற்பட்டுள்ளது. பொய்ப்பிரசாரத்திலும் ஈடுபட்டுள்ளது. எமக்கும் பொறுமை என்பது ஓர் எல்லைவரைக்கும் தான். நாம் இழந்த அந்த 11 போராளிகளும்- 11 ஆயிரம் போராளிகளிற்குச் சமனாகப் பார்க்கிறோம். இவர்களது இழப்பு எமது அமைப்பிற்கு மிகப்பெரிய இழப்பு. நாம் பொறுமையாக இருக்கவேண்டும். இனியும் இப்படியான சம்பவம் நடக்கக்கூடாது.

எமது செயற்பாடுகளைத் தாமதப்படுத்திக் கொண்டுபோனால் சிக்கல்கள் கூடிக்கொண்டுபோகும். இந்தப் போராட்டத்தில் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் மீனவ மக்கள் தான். சமாதானச் சூழ்நிலை வந்த பிறகும்கூட இது தொடர்கிறது. யுத்த நிறுத்த உடன்படிக்கையை எமது மக்களிற்கு எவ்வளவு சாதகமாக்கி, எமது மக்களிற்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்க வேண்டியதாகவுள்ளது.

மக்கள் வீடுகளின்றி அல்லற்படும்வேளையில், மாநகரசபை காணிக்குள் பாரிய இராணுவமுகாமொன்றை அமைக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாணம் தொடர்ந்தும் இராணுவமயமாக்கப்பட்டு வருகிறது எனத் தமது உரையில் குறிப்பிட்டார்.

(ரா,சு)

# இலவச சட்ட உதவி அலுவலகம் பருத்தித்துறை நீதிமன்றத்தில்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்றத்தினர் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளைச் சேர்ந்த வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் இடம்பெயர்ந்தோர், வயோதிபர், பெண்கள், சிறுவர் ஆகியோருக்கு இலவசச் சட்ட உதவிகளை வழங்கும் வகையில் பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் ஒரு அலுவலகத்தைத் திறந்துள்ளனர்.

சட்ட உதவி தேவைப்படுவோர், இணைப்பாளர் சட்டத்தரணி பொ. குமாரசாமியை வேலை நாட்களில், குறித்த அலுவலகத்தில் சந்தித்து, இலவச ஆலோசனைகளையும், சட்ட உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதி மக்களுக்கு சட்ட ஆலோசனை வழங்குவதற்கென இந்த இணைப்பாளர் பிரதி திங்கட்கிழமைகளில் சாவகச்சேரி நீதிமன்றத்தில் உதவிகளை வழங்குவார்.

(116)

# மாணவர்களுக்காக மாட்டுவண்டிச் சேவை

(யாழ்ப்பாணம்)

கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பாடசாலைக்கு நான்கு மைல் தூரத்தில் உள்ள மேழிவனம் கிராமத்திலிருந்து வருகைதரும் மாணவர்களின் நன்மை கருதி மாட்டுவண்டிப் போக்குவரத்து சேவை ஒன்று நடத்தப்படுகிறது.

மாட்டுவண்டிச்சேவை மூலம் மாணவர்களை ஏற்றியிறக்கும் சேவையின் வெள்ளோட்டவிழா நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு அ.த.க பாடசாலை அதிபர் இயேசுதானந்தா தலைமையில் இடம்பெற்றது.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் : பா.ஐஸ்வர்யா
முகவரி : அரசடி லேன்,
திருநெல்வேலி
கிழக்கு.

எட்டாவது அகவையில்

பெயர் : இ.கௌரிவானுஷன்
முகவரி : இளவாலை வடக்கு,
இளவாலை,



பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்




# தேவை ராஜ பார்வை



ரிக்கோலோவுக்கு பயிற்றுநர் சந்தீப் பட்டீலின் ஆலோசனை

2003 உலகக்கிண்ணப் போட்டிகள் கென்யாவைப் பொறுத்தவரை மாபெரும் பாய்ச்சல். உலகக்கிண்ணப் போட்டிகளில் ஒரேயொரு ஆட்டத்தில் மட்டுமே அவர்களால் விளையாட இயலாமற்போயிற்று. அது இறுதி ஆட்டம். பல டெஸ்ட் அந்தஸ்த்து நாடுகள் தூக்கியெறியப்பட, கென்யா மேலே மேலே சென்றது. உண்மையில் எவருமே SUPER SIX இற்குள் இவர்கள் வருவார்கள் என்று யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். மூன்று டெஸ்ட் பந்தய நாடுகளான பங்களாதேஷ், இலங்கை, சிம்பாப்வே ஆகிய மூன்று நாடுகளையும் பணிய வைத்தவர்கள் அவர்கள்.

ஸ்ரீவ் டிக்கோலோ- அணித்தலைவர் மிக நம்பிக்கையுடன் இருக்கின்றார். ஏனெனில் அவர்களின் மேன்மை, தம்நாட்டில் மட்டுமல்ல, ஆபிரிக்கர் என்ற அளவில் மிகுந்த நம்பிக்கையையும், மதிப்பையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது. ரிக்கோலோ கருத்துக் கூறும்போது - கட்டமைப்பைச் சீராக்கிச் சரியான நடைமுறைகளை மேற்கொண்டால் கென்யா, மேலும் மேலும் வளரும் என்று கூறுபவர், கென்யா மேலெழுந்து விட்டது, இனி அதனைத் தக்கவைக்க வேண்டியது எங்கள் கடமை என்று கூறுகிறார்.

உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு முன் பதினெட்டு ODI கள் மட்டுமே விளையாடியிருந்த அணி கென்யா. இது எவ்வகையிலும் உலகக்கிண்ணப் போட்டி போன்ற மாபெரும் போட்டியொன்றுக்கு எவ்வகையிலும் போதாது என்கிறார் அவர். இன்னும் கூறுகையில், புதிய தலைமுறை வீரர்கள் கென்ய அணிக்குள் உள்வாங்கவே வேண்டும் உடனடியாக. ஏனெனில், தற்போதைய அணியிலுள்ளவர்களில் சிலர் ஆட்டத்தைத் தொடரும் எண்ணங்கொண்டவர்களாக இல்லைபோலத் தெரிகிறது. உதாரணமாக - முனனாள் கென்ய அணித்தலைவரும், அவுஸ்திரேலியாவுடனான ஆட்டத்தில் முத்திரை பதித்தவருமான ஆசிப் கரீம் ஓய்வுபெறுவது நிச்சயம். அவருக்கு வயது நாற்பது. இன்னொருவர் சுழற்பந்து வீச்சாளர் கொலின்ஸ் ஒபுயா. கிரிக்கெட் வருமானம் போதாத காரணத்தால், அவர் தனது டாக்டர் தொழிலைத் தொடரக்கூடும் என்று அறிவித்துள்ளார். டிக்கோலோ கொஞ்சம் சலித்துத்தான்கொள்கிறார். தனிநபர்கள் தம்தம் முடிவை எடுப்பதையிட்டு ஒன்றும் செய்யவியலாது. ஆனால், இந்த உலகக் கிண்ணப் போட்டிகள், கென்ய இளைஞர்கள் நிறையப் பேரைக் கிரிக்கெட்டின்பால் கொண்டுவரும் என்று நம்பிக்கை கொண்டுள்ளார். டிக்கோலோ அற்புதமானதொரு வீரர். எந்த டெஸ்ட் அணிக்குள்ளும் இருகரம் நீட்டி வரவேற்கப்படும் ஆற்றல் நிறைந்தவர் அவர் என்பது பழைய செய்தி. அதோடு, கென்யா ICC இற்குச் சரியான செய்தியை, சரியான சந்தர்ப்பத்தில் சொல்லி இருக்கிறது. அதோடு, கென்யாவின் கிரிக்கெட் உயர்தரத்தை அடைய இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கு கென்ய அரச மட்டத்தின் ஆதரவு மிகவும் அவசியம். அந்த மட்டத்திலேயே திட்டமிடல், பொருளாதார வழிவகைகளைக் கண்டுகொள்ளல் என்பன இலகுவில் சாத்தியமாக முடியும். அதோடு கென்யாவிற்கு வெளியிலுள்ள கிரிக்கெட் அனுபவங்களையும் பெற்றுக்கொள்ள இயலும்.

இதனைச் செயற்படுத்திக் கென்ய அணியை மேன்மேலும் வளர்க்கவேண்டும் என்பதே கிரிக்கெட் ரசிகர்களின் அவா. கென்யா செய்யும் என்று நிச்சயமாக நம்பலாம். உயர்ந்த இடத்தில் நின்று கொண்டு இன்னும் அச்சத்துடனும், அடக்கத்துடனும் பேசுகிறார் ஸ்ரீவ் டிக்கோலோ. அது அவரது விசுவாசமான சிந்தனையை எடுத்துக் காட்டுகிறது.

இதேவேளை, கென்ய அரசு - கென்ய கிரிக்கெட்டின் பிரச்சினைகளைச் சரியாக உணர்ந்து கருத்து வெளியிட்டுள்ளது. கென்ய விளையாட்டுத்துறை அமைச்சர் நஜீப் பலாலா கருத்துத் தெரிவிக்கையில் - கென்ய மக்கள் அனைவரையுமே கென்ய கிரிக்கெட் அணி ஒன்றுபடுத்திவிட்டதென்றார். தேசிய செயற்பாட்டு அட்டவணைகளில் இனிக் கிரிக்கெட்டுக்கு முக்கியஇடம் கொடுக்கப்படும். அதேபோல, பரந்தமுறையில் நடாத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் ஏற்படுத்தப்படும். அதோடு, அடிமட்டத்திலிருந்து எல்லோரும் கிரிக்கெட்டை ஆடும் வகையில் நாட்டின் சகல பகுதிகளுக்கும் கிரிக்கெட் எடுத்துச்செல்லப்படும் என்றும் எடுத்துக் கூறியுள்ளார். இவையெல்லாம் முழுமனதுடன் செய்யப்பட்டால்தான் ICC யும் கென்யாவுக்கு டெஸ்ட் அந்தஸ்த்து கொடுப்பது பற்றிச் சிந்திக்கும்.

– ஜோசப் கிருஷ்ணா –

# வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும்


கிரிக்கெட் பற்றிப் பேசும்போது நன்றாகச் செய்தவர்கள் அல்லது திறமை காட்டியவர்கள் என்ற வகையில் பலரைப் பற்றிக் கடநத ஒன்றரை மாதங்களாக நிறையப் பேசியிருப்போம். இந்த வகையில் பேசப்படுபவர்கள் மட்டுமன்றி இன்னொரு வகையில் பேசப்படுபவர்கள் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டாமா? கிரிக்கெட் உலகக்கிண்ணம் யாரையும் லேசில் விட்டுவிடாது. அது, அது சார்ந்த எந்தத்துறையையும் விட்டுவிடாது.



அலன் டொனால்ட் - சோபிக்காதவர்.

பீடிகை ஏன், விடயத்துக்கு வருவோம். WIS DEN WEBSITE பல கிரிக்கெட் வீரர்களைப் பல வகைகளிலும் இனங் கண்டிருக்கிறது. இதில் புலஸ்தி குணரட்ண பற்றிக் குறிப்பிடும்போது - இவர் உலகக்கிண்ணப் போட்டிகளில் **FLOP** என்று தீர்மானித்திருக்கிறது. இவர் மட்டுமல்ல இந்தப் பட்டியலில் இன்னமும் பலர் இடம்பெற்றிருக்கிறார்கள். உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் ரசிகர்களின் எதிர்பார்க்கையை ஏமாற்றியவர்கள் என்றவகையில் - புலஸ்தி, இங்கிலாந்தின் டிரெஸ்கொதிக், இந்தியாவின் வீரேந்தர் ஷேவாக், தென்னாபிரிக்க ஜக்கஸ் கலிஸ் மற்றும் அலன்டொணால்ட் ஆகியோர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

இந்தப் பட்டியலில் சோஹெய்ப் அக்தார், அப்துல் ரசாக், இன்சமாம் உல்ஹக் ஆகியோரும் இடம்பெறுகிறார்கள். அதோடு, இலங்கை அணி வீரர் மஹேல ஜயவர்தன ரசிகர்களைக் கைவிட்டவர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளார். இவர் மிகப்பெரிய கிரிக்கெட் திருவிழாவை விரும்பாமல் இருந்தவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். மேலும் புலஸ்தி அவுஸ்திரேலியாவிற்கு எதிரான இரண்டு போட்டிகளில், 14 ஓவர்களில் 106 ஓட்டங்கள் கொடுத்ததன்பேரில் கடும் பார்வை கொண்ட புலஸ்தி, பந்து வீச்சிலும் LINE AND LENGHT ஐக் கடுமையாக மீறிவிட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். இந்த வகையில் இனிவரும் காலத்தில் இன்னும் பல வீரர்கள் முன்பாகக் குற்றப்பத்திரிகைகள் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். மேலும் இவர்களுக்குத் தண்டனை என்னவென்று தெரியவில்லை. சிலவேளை - அவ்வவ் நாட்டுத் தெரிவாளர்கள், பயிற்றுநர்கள் தண்டனை கொடுப்பார்கள் என்று எண் ணினார்களோ தெரியவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் - பெரிய மனிதர்களான தெரிவாளர்கள், பயிற்றுநர்களுக்கே தண்டனை கொடுத்தாகவேண்டும் என்று அவ்வவ்நாட்டு ரசிகர்கள் போர்க்கொடி தூக்கிவிட்டார்கள் என்பதுதான்.



ட்ரஸ் கோதிக் சாதித்தது என்ன?

எனவே இவர்களுக்கெல்லாம் தண்டனை கொடுக்கத் தகுதியானவர்கள், நன்கு விடயமறிந்த கிரிக்கெட் ரசிகர்கள்தான் என்று சொன்னால் அதில் தப்பில்லை.

– சரண்யா –

# உள்ளதைச் சொல்கிறார்



வெற்றிக்குத் தகுதியான வீரர்கள்

மாபெரும் திருவிழாவின் கடைசி நாளில் சோபிக்க முடியாமல்போன இந்திய அணியின் பயிற்றுநர் ஜோண் ரைட்டும் குற்றச்சாட்டுக்கள் எனும் அம்புகளின் தாக்கத்தில் இருந்து தப்பவில்லை. அதேவேளை, அவர்தான் முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டுமா அல்லது தோல்வியின் சுமையின் சிறுபகுதிக்கு அவர் சொந்தமா என்பது விடையில்லாத வினா. இது ஒருபுறம் இருக்க - வெட்கப்படுவதற்கு எதுவும் இல்லாத ஒரு உண்மையை இவர் எடுத்துக் காட்டியுள்ளார். இன்னும் நிறைந்த தாக்கம்கொண்ட ஒரு அணியாக நீங்கள் வளரவேண்டுமானால், இந்திய இளம் வீரர்களே உங்களைக் களம் கண்ட அவுஸ்திரேலிய அணியிடமிருந்து நிறைய விடயங்களைக் கற்றுக்கொள்ளுங்கள் என்கிறார்.

உலகக்கிண்ணத் தோல்வியின் பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்து இவர்- அவுஸ்திரேலிய அணியின் பல்துறை திறமைகளுக்கு எங்களிடம் சரியான பதில் இல்லைத்தான் என்று ஒப்புக்கொண்டுள்ளார். அவுஸ்திரேலியாவிடம் முதல்சுற்று ஆரம்பத்தில், ஒன்பது விக்கெட்டுகளில் படுதோல்வி கண்டவர்கள் இந்திய அணியினர். இதன் பின் தொடர்ந்து எட்டு ஆட்டங்களில் வெற்றிகளைக் குவித்தார்கள். ஆனால், இறுதிப்போட்டி என்னவாயிற்று என்று விபரிக்கத் தேவையில்லை.

எங்கள் உண்மையான உள்ளார்ந்த திறமையை நாங்கள் காட்டியிருந்தால், எங்களுக்குச் சந்தர்ப்பம் இருந்திருக்கும். எனது வீரர்கள் நன்றாகவே செய்துகொண்டு வந்தார்கள். ஆனால், இறுதி ஆட்டம் அவர்களுக்கு ஒரு பதகளிப்பைக் கொடுத்துவிட்டது. ஷாஹீர்கான் முதல் ஓவரில் பதினைந்து ஓட்டங்கள் கொடுத்தது அவரது பதகளிப்பையே காட்டியது என்கிறார்.

இந்திய அணியில் இடம்பெற்றுள்ள நிறைய வீரர்கள் இளம் வயது வீரர்கள். இவர்களுக்கு இன்னமும் பல உலகக் கிண்ணக்கோப்பைகளில் விளையாடும் சந்தர்ப்பம் உள்ளது. ஒரு மிகவும் பலமானதொரு இந்திய அணி உருவாகிக் கொண்டு வருகின்றது என்ற நம்பிக்கை எனக்குண்டு என்கிறார் ஜோண் ரைட்.



ஜோன் ரைட் - உண்மை!

கங்கூலி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்காதது பற்றி எல்லோருமே அவரை விமர்சிக்கிறார்கள். ஆனால், ஜோண்ரைட் அதனை நியாயப்படுத்துகின்றார். தடம் பந்துவீசுவதற்கு ஏற்றதாகத்தான் இருந்தது. ஆனால், ஆரம்பத்திலேயே விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்க வேண்டும். அங்குதான் பிழை நடந்துவிட்டது என்கிறார் பயிற்றுநர்.


எது நடந்திருந்தாலும் சரி, நான் இந்திய வீரர்களின் பக்கமே நிற்கிறேன். இந்திய அணியினர் சாதிக்கக் கூடியவற்றைச் சாதித்தார்கள். மூன்று வேகப்பந்து வீச்சாளர்கள் மற்றும் ஒரு சுழற்பந்து வீச்சாளரைப் பயன்படுத்தியமுறை சிறப்பாகவே செயற்பட்டது. துடுப்பாட்ட வீரர்களும் நன்றாகவே செய்தார்கள். உதாரணமாக மும்மூர்த்திகள் தமக்கிடையில் 49 விக்கெட்டுக் களைப் பகிர்ந்து கொண்டார்கள். சச்சின் 673 ஓட்டங்களைக் குவித்தார். நாங்கள் எங்களைச் சுயவிமர்சனம் செய்துகொள்ள வேண்டும். அவுஸ்திரேலிய அணி தமது உயர் தகைமையை எவ்வாறு தக்கவைத்துக் கொண்டுள்ளது என்பதை இந்திய வீரர்கள் கற்றுக்கொள்ள முயலவேண்டும். மேலும் இந்தியா 1986 இற்குப் பின், தென்னாசியாவிற்கு அப்பால் எந்த டெஸ்ட் தொடரையும் வெல்லவில்லை. இந்தியா தனது வேகப்பந்து வீச்சில் உயர் தகைமையைப் பெறுவதில் கூடியகவனம் செலுத்தவேண்டும். அதேபோல, நின்று நிலைத்து வேர் விடக்கூடிய ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களையும் இனங்காண வேண்டும் என்றும் கூறுகிறார்.

ஜோண்ரைட் கூறுவது சரியான கணிப்பாகவே தெரிகிறது. அவர் இந்திய அணி, சிறந்த அணி என்று கூறும் அந்த விடயத்தில் - ஏனெனில் இறுதியாட்டத்தில் வீரேந்தர் ஷேவாக் மட்டும் ரனஅவுட் (தற்கொலை) ஆகாமல் இருந்திருந்தால், (இலக்குவேறு) முந்நூறுக்குக் குறையாமல் ஓட்டங்கள் குவிந்திருக்க நியாயம் உண்டு. எனவே- சில வேளைகளில் இறுதியாட்டத்தின் முதல்நாள் இரவில் இந்திய அணி வீரர்கள் அனாவசியமாக 'பேய்க்கனவுகள்' கண்டிருக்காவிட்டால், நிம்மதியாக உறங்கியிருந்தால் சில வேளைகளில் இன்றைய கருத்துப்பரிமாறல்கள் வித்தியாசமாகக்கூட இருந்திருக்கலாம்.

– நிர்மலன் –

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# வருவீர்களா



தென்னாபிரிக்கா - கொழும்பில் தரிசனம் தருமா...?

ஏப்ரல் முதலாம் திகதி ஆரம்பமாக இருந்து நடக்குமா எனச் சந்தேகப்பட்டிருந்த முக்கோண சார்ஜா கிரிக்கெட் போட்டிகள் நடைபெறக்கூடிய ஒளிக்கீற்றுக்கள் தென்படுகின்றன. இச்சுற்றுப் போட்டியில் பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, இலங்கை ஆகியன கலந்துகொள்வதாக இருந்தது. ஆனால், வளைகுடாவில் ஏற்பட்டுள்ள யுத்தம் - சார்ஜாவில் இப்போட்டிகளை நடாத்துவதில் தடைக்கல்லை ஏற்படுத்தியிருந்தது. முக்கிய காரணம் - பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தென்னாபிரிக்கா - சார்ஜா செல்வதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தது. இதேவேளை, இலங்கை தீர்க்கமான முடிவொன்றை எட்டமுடியாத நிலையில் இருக்கிறது. பாகிஸ்தான் மட்டும் சார்ஜாவிற்கு போவதில் தனக்கு எவ்வித தடங்கலும் இல்லை என்று அறிவித்திருந்தது. இந்நிலையில், தற்போது புதிய ஒளி தெரிய ஆரம்பித்துள்ளது. **CBFS** இன் தலைவர் அப்துல் றஹ்மான் புகாதிர் - இலங்கைக் கிரிக்கெட் சபையான **BCCSL** உடன் தொடர்புகொண்டு, சார்ஜா போட்டிகளை இலங்கையில் மேடையேற்ற முடி

# இல்லையா

யுமா என்று வினவியுள்ளார். இதேவேளை, தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் அணிகளிடம் - இலங்கை சென்று விளையாடச் சம்மதமா என்றும் கேட்டுள்ளார்.



வாருங்கள், பார்க்க ஆட்டத்தை!

ஆனால், இலங்கையால் உடனடியாகச் சம்மதம் என்று கூறவியலவில்லை. ஏனெனில், மைதான வசதிகள், அவசர ஏற்பாடுகள் என்று இன்னொரன்ன தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டியநிலைமை இருக்கிறது. எனவே இலங்கைக் கிரிக்கெட் சபை- தங்கள் பதிலைக் கூறுவதற்குச் சிலநாள் அவகாசம் கேட்டுள்ளது. இந்த விடயத்தில் இலங்கைக் கிரிக்கெட் சபை விரைவிலேயே ஒரு முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம். அதுவும் சாதகமான முடிவாகவே இருக்கும் என்பதையும் நம்பமுடியும். ஏனெனில், இது இலங்கைக்குக் கிடைத்துள்ள நல்லதொரு வாய்ப்பு. மேலும் - புகாதிர் அவர்கள் பாலைவனத்தில் கிரிக்கெட் பசுஞ்சோலை அமைத்த சாதனையாளர். அதுமட்டுமன்றி கிரிக்கெட் வீரர்களில் (முன்னாள் இன்னாள்) நலன் கருதியோர் அமைப்பாகவே CBSF செயற்பட்டு வருகிறது. அதில் பெரிய பெரிய சாதனைகளையும் செய்திருக்கிறது. இந்தவகையில் அவருக்கு உதவவேண்டியது இலங்கையின் கடமையுமாகும்.

இதில் இலங்கை ரசிகர்களின் எதிர்பார்ப்புக்கள் எப்படி?

ஒன்று - பாகிஸ்தானும், தென்னாபிரிக்காவும் இலங்கை வருவதற்குச் சம்மதித்து விட வேண்டும்.

இரண்டாவது - இலங்கையில், சம்மந்தப்பட்டோர் சுற்றுப்போட்டியை நடாத்துவதற்கு விரைவாக வசதிகளைச் சீர்செய்து, புகாதீர் அவர்களுக்குச் சம்மதத்தைத் தெரிவித்து விடவேண்டும் என்பதுதான். ஒருவரின் இழப்பு இன்னொருவருக்கு ஆதாயம் என்பது ஒரு விதி. சார்ஜா ரசிகர்களின் இழப்பு - இலங்கை ரசிகர்களின் ஆதாயமாகப் போகிறது அவ்வளவுதான். அதோடு, மூன்று பேரும் இப்போதுதான் விழுந்து எழும்பி நிற்கிறார்கள். அவர்களின் ஆக்ரோஷமான ஆட்டத்தைக் காணும் வாய்ப்புக்காக இலங்கை ரசிகர்கள் காத்திருக்கிறார்கள். எல்லாம் சரிவந்தால்- ஏப்ரல் மூன்றாம் திகதியிலிருந்து பத்தாம் திகதிவரை முக்கோணச் சுற்றுப்போட்டி நடைபெறும்.

— நிமலா —



புக்கானன் - இரும்புப் பிடி

# முன்னேற இடமுண்டு

அவுஸ்திரேலியா மொத்தம் மூன்று முறையும், அதில் தொடர்ச்சியாக இரண்டாவது முறையும் உலகக்கிண்ணத்தை வென்றாயிற்று. இனியென்ன, இதைவிட சகல அம்சங்களும் பொருந்திய கிரிக்கெட் அணியொன்று பொதுவில் இருக்கமுடியாது என்ற கருத்துப் பரவலாகவே உள்ளது. இதில் சுவாரஸ்யமான விடயம் என்னவென்றால், அவுஸ்திரேலிய அணியின் பயிற்றுநர் ஜோண் புக்கானனின் சிந்தனைதான். இவர் எதிலுமே திருப்தியடையாத மனிதர் என்றும் கூறலாம். சரியான பேராசை பிடித்த மனிதர் என்றும் கூறலாம். அவுஸ்திரேலியா இன்னமும் சிறந்த அணியாக மாற இடமிருக்கிறது என்கிறார் இவர். மூன்றாந்தவணை விடுமுறை விட்டுச்செல்லும் பள்ளிக் குழந்தைக்கு - அடுத்த வருடப் புத்தகத்தைக் கொடுத்து உடனே படிக்கத்துவங்கு என்று பிள்ளையைப் பார்த்து முறைக்கும் அம்மா அல்லது வாத்தியார்தான் நினைவுக்கு வருகிறார்.

2003 உலகக்கிண்ணப் போட்டிகள் நல்லதொரு அத்திவாரம்தான். ஆனால், இன்னும் நிறையச்செய்ய இடமிருக்கிறது. இதுவரையில் மற்றநாட்டு அணிகள் செய்வதைத்தான் நாங்கள் செய்துகொண்டு இருக்கிறோம். ஆனால், அவர்களைவிடச் சிறந்த மேம்பாடகவும், தொடர்ச்சியாகவும் செய்கின்றோம் அவ்வளவுதான் என்கின்றார் அவர். கிரிக்கெட் ஆட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலும் - அது தொழில்நுட்பத்துறையாக இருந்தாலென்ன, **TACTICAL** துறையாக இருந்தாலென்ன - கூடிய கவனம் செலுத்தி ஏனைய அணிகள் செய்வதிலிருந்து வித்தியாசமாகச் செய்யவேண்டும்.



அவுஸ்திரேலியாவின் “வேகப் பிசாசுகள்”
மக்ரா - ஜிலெஸ்பி - லீ

இத்தகைய அணுகுமுறையில் முன்னேற வேண்டியுள்ளது என்றும் கூறுகிறார். எல்லாம் முடிந்ததென்று ஆறுதலாக இருந்துவிட்டால், அது அவுஸ்திரேலிய கிரிக்கெட்டுக்கோ, சர்வதேச கிரிக்கெட்டுக்கோ நன்மை பயப்பதாக இருக்காது என்பது அவரது கொள்கை. ஆட்டத்தில் அபிவிருத்தி காண வேண்டும். அதனைத் தொடர்ந்து செய்யவேண்டும். இவரது இந்த எண்ணங்கள் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதற்கு ஒரு உதாரணம்- அமெரிக்க பேஸ் போல் விளையாட்டுப் பயிற்றுநர் மைக் யங் என்பாரும் உலகக்கிண்ண அணிக்குச் சில பயிற்சிகள் வழங்கியுள்ளனார். இந்தச் சிந்தனையின் பலன் அவுஸ்திரேலிய அணியின் களத்தடுப்பில் காணப்பட்டது என்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.

ஏனைய சர்வதேச அணிகளுக்கும் தற்போது அவுஸ்திரேலியாவிற்கும் ஏனைய அணிகளுக்கும் ஏதாவது இடைவெளி ஒன்றிருக்கிறது என்று நினைத்தால், அதனை நிரவ முயற்சி எடுக்கவேண்டும் என்கிறார் அவர். இறுதியாக எமக்கிடையுள்ளே வித்தியாசத்தை நிரவ ஏனைய நாடுகள் முயற்சி எடுக்கும்போது, நாம் அதனை விசாலப்படுத்தவே முனையவேண்டும் என்கிறார் டிக்கானனன். அற்புதமான மனிதர்தான். வீரர்களைக் கசக்கிப் பிழிந்துதான் வேலை வாங்குகிறார் போலத்தெரிகின்றது. அடுத்த கட்டம்- மேற்கிந்திய சுற்றுப் பயணம். நான்கு டெஸ்ட் ஆட்டங்கள் மற்றும் ஏழு ஒருநாள் ஆட்டங்கள் பெரிய சவாலாகத்தான் இருக்கப் போகிறது.

— நிர்மலன் —

# இனித் தொடர்



கொழுந்துவிட்டுப் பிரகாசித்த மகிழ்ச்சி

# குறைகேள் மன்றமா?

உலக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று முடிந்தும்விட்டன. மகிழ்ச்சிக்கும் குறைவில்லைதான். எனினும், இயல்பாக குறைநிறைவுகள், விமர்சனங்கள், விவாதங்கள் ஏற்படுவது தேவையானதுடன், தவிர்க்கப்பட முடியாததுமாகும். இங்கு, கிரிக்கெட் விமர்சகர் ஒருவர் தன் கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார்.

ICC யும், அலிபச்சாரும் என்னதான் மறுத்தாலும் **EGO** வும், ஆபிரிக்க அரசியலும் உலக்கிண்ணப் போட்டிகளைப் பாதித்ததை மறுக்கமுடியாதென்கிறார். இறுதிப் போட்டியின்போது மல்கம் கிரே, உலகக்கிண்ணம் என்பது கிரிக்கெட் தொடர்பானதே என்பது ஒரு அழகிய பொய் என்கிறார். கென்யாவிலும், சிம்பாப்வேயிலும் நடைபெறாத ஆட்டங்கள், அது தொடர்பில் அணிகளுக்கிடையிலா மன உரசல்கள் எல்லாம் மறைக்கப்பட முடியாதன என்றும் எடுத்துக்காட்டுகின்றார்.

பொதுவில் இன்னொரு விடயம் எல்லாத் தரப்பாலும் விமர்சிக்கப்பட்டுக் கொண்டு வருவதையும், அதில் ஓரளவில் உண்மை இருப்பதையும் எடுத்துக்காட்டலாம். அதாவது, மிகநீண்டதொரு காலப்பகுதியை உள்ளடக்கிய போட்டித் தொடராக இது அமைந்துவிட்டது என்பதுதான். அது ஒன்றரை மாதங்கள், 54 ஆட்டங்கள்- ரசிகர்களுக்கும் ஏன் விஷேடமாக வீரர்களுக்கும் அயர்ச்சியையும், சோர்வையும் கொடுத்தது என்று எடுத்துக் காட்டப்படுகின்றது. உண்மையில் நிதிசார்ந்த துறைகளுக்கு இது இலாபத்தைக் கொடுத்



அட்டகாசமான ஆரம்பவிழா

தாலும், மற்றெல்லாவகையிலும் வரவேற்கக் கூடியதாக இருக்கவில்லை என்கிறார்கள் விமர்சகர்கள் .

இதற்கான மாற்றுவழிகளும் எடுத்துக் காட்டப்படுகின்றன. பல ஆட்டங்கள் ஒரே நாளில் நடத்துதல் நொக் அவுட் முறையிலான ஆட்டங்கள் - அரையிறுதி ஆடட்டங்களுக்கு முன்பதாகவே அறிமுகப்படுத்தல் மற்றும் இம்முறைபோல் முதல் சுற்றுப் போட்டிப் புள்ளிகளையும் **SUPER SIX** கட்டத்துக் கொண்டுசெல்லாமல் விடுதல், இவற்றைப் பின்பற்றுதல் - ஆட்டங்களின் கூடுதல் விறுவிறுப்பைக் கொடுக்கும் என்கிறார் விமர்சகர் ஒருவர். மேலும் - கென்யா இறுதிப்போட்டிக்கு வந்ததை இவர் ரசிக்கவில்லை. இங்கிலாந்து தென்னாபிரிக்கா அல்லது மேற்கிந்தியத் தீவுகள் அரைஇறுதிப் போட்டிக்கு வந்திருக்க வேண்டும் என்று கருதுகிறார். (அரசியல் - நியூசிலாந்தையும், இங்கிலாந்தையும் ஏதோவொரு கட்டத்தில் பாதித்ததை எல்லோரும் ஏற்றுக்கொள்வர்) மிகுந்த பரபரப்பையும், விறுவிறுப்பையும் ஏற்படுத்திய ஆட்டங்கள் மிகக் குறைவென்னும் விமர்சகர், அதற்கான உதாரணங்களாக மேற்கிந்திய - தென்னாபிரிக்க ஆட்டம், இங்கிலாந்து - அவுஸ்திரேலிய ஆட்டம், மேற்கிந்திய - இலங்கை ஆட்டங்களின் சிறப்பைக் குறிப்பிடுகின்றார்.

இன்னொரு குறிப்பையும் கூறும் இவர் - எல்லாமே பணமயம், அதுவே எதிர்காலத்தில் கிரிக்கெட்டுக்குப் பாதகமாக அமையும் என்பதையும் சூசகமாக உணர்த்துகின்றார்.

— நர்மதா —

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு
- திருக்குறள்.

# நமது நோக்கு

## ஊடுருவலும் உதவியும்

அண்மையில் - முல்லைத்தீவுக் கடலில் தாக்கியழிக்கப்பட்ட சீன மீன்பிடி ட்ரோலர் சம்பவத்தில் விடுதலைப் புலிகளுக்கு எவ்வித சம்பந்தமும் இருக்கவில்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கையும் தெளிவுபடுத்தியிருக்கிறது.

ஏற்கனவே - விடுதலைப் புலிகளின், கடற்புலிகள் சார்பில், தளபதி செழியனால் - இத்தாக்குதல் தம்மால் மேற்கொள்ளப்படவில்லை என உறுதியாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததன் பின்னர் - நீண்ட, ஆழமான விசாரணைகளை மேற்கொண்ட கண்காணிப்புக்குழுவும் - விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்பட்ட பழி தவறானது என்பதைத் தெளிவாக்கியிருக்கிறது.

சீன நாட்டு ட்ரோலர் தாக்கப்பட்டு, அதிலிருந்த பணியாளர்கள் கொல்லப்பட்டும், காணாமற்போனதுமான சம்பவம்பற்றி வெளித்தெரியவந்தது முதலே - இதனை விடுதலைப் புலிகளே செய்ததாகவும் -

சர்வதேசக் கடற்பரப்பில் தமது வர்த்தகக் கப்பல் தாக்கியழிக்கப்பட்டதற்குப் பழிவாங்குமுகமாகவே புலிகள் இத்தாக்குதலை நடாத்தியதாகவும் - படைத் தரப்பிலிருந்தும், கொழும்பு ஊடகங்களுமாகக் கதை கட்டிவிட்டன.

தாக்கியவர்கள் சாதாரண உடையில் இருந்ததாகவும், இலங்கை மொழியொன்றைப் பேசியதாகவும், சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கூறியதாகவும் - ஆனபடியால் இது விடுதலைப் புலிகளாலேயே மேற்கொள்ளப்பட்டதாகவும் - தெற்கிலுள்ள ஊடகங்கள் தம்பாட்டிற்குச் சரடுவிட்டன.

இந்தப் பொய்ப் பிரசாரங்களையும், இட்டுக்கட்டுக்களையும் தோலுரித்துவிடுமாப்போல - கண்காணிப்புக் குழு உண்மையைத் தெளிவாக்கியிருக்கிறது.

ஆனால் - அதேவேளை, குறிப்பிட்ட தாக்குதலை, கடற்படையையும் தவிர்ந்த வேறு ஆயுதக் குழுவே நடாத்தியிருக்கக்கூடும் என்ற கண்காணிப்புக்குழுவின் கருத்தானது - இலங்கைக் கடற்பரப்பில் நடைபெற்றுவரும் நடமாட்டங்கள் பற்றிய சந்தேகங்களையும் தோற்றுவித்திருக்கிறது.

முல்லைத்தீவுக் கடற்பரப்புவரை ஊடுருவித் தாக்குதல் நடாத்தியவர்கள் யார்?, இந்தத் தாக்குதலின் பின்னணி என்ன?, எந்த நோக்கத்திற்காக இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கக் கூடும்?, தாக்குதலை விடுதலைப் புலிகளின் மேல் பொறுப்பிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட அவசரகதியிலான பிரசாரங்கள் பற்றியெல்லாம் பல்வேறு வினாக்களையும் கண்காணிப்புக்குழுவின் அறிக்கை ஏற்படுத்தியிருக்கிறது.

தாக்குதல் நடாத்தப்பட்ட பகுதியில் கடற்படையினரின் நடமாட்டமும், கண்காணிப்பும் தீவிரமாகவே இருந்து வந்திருக்கின்றது. 'வருண கிரண' நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் கடற்படையினரை மீறி இச்சம்பவம் நடைபெற்றிருப்பது - கடற்படை மீதான சந்தேகத்தை கண்காணிப்புக்குழு கூறுவதுபோல முற்றிலுமாகப் போக்கிவிடவில்லை என்றே பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அதேவேளை - இலங்கையின் கடற்பரப்பில் செல்வாக்குச் செலுத்த விரும்பும் அந்நிய சக்திகளின் ஊடுருவல் பற்றியும் கடற்படை அறிந்திருக்காமலில்லை.

கடற்படையின் பல நடவடிக்கைகளுக்கும், இந்தச் சக்திகளின் துணையும், நேரடி - மறைமுக உதவிகளும் ஏராளமாக இருப்பதை கடந்த காலத்தில் நடைபெற்ற பல சம்பவங்களே உணர்த்தியிருக்கின்றன.

இவ்வாறான நிலையில் - சீன நாட்டின் ட்ரோலர் ஒன்று தாக்கப்படுவதற்கு - அதில் சம்பந்தப்படக் கூடிய சக்திகள் பற்றிய சந்தேகமும் -

சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் தாக்கப்பட்ட ஒரு சில தினங்களுக்குள்ளாக - புலிகளின் மீது பழியைப் போட்டுக் கொள்வதற்காக இந்த வகையில் இந்தத் தாக்குதல் நாடகத்தை அரங்கேற்றியவர்கள் யார்? அதற்குத் துணையானது யார்? என்ற சந்தேகங்களும் தீர்க்கப்படாமலேயே உள்ளன.

# பொதுமக்களின் எதிர்ப்பையும் மீறி தளம் அமைக்கும் முயற்சிகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

மக்களின் பலத்த எதிர்ப்பையும் மீறி, குடாநாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை உள்ளக்கியதாக இராணுவமுகாம் அமைக்கும் முயற்சியில் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

முன்னர் யாழ். மாநகரசபை அமைந்திருந்த பிரதேசம் உள்ளிட்ட பல பகுதிகளை உள்ளடக்கி இராணுவத்தினர் தமது காவலரணை அமைக்கும் பணியினைத் தீவிரமாக்கியுள்ளனர். அப்பகுதி எங்கும் மக்கள் பாவனைக்குத் தடை என்கின்ற அறிவிப்பு பலகையும் தொங்கவிடப்பட்டுள்ளது. யாழ். மாநகர ஊழியர்கள் கழிவுப்பொருட்களைக் கொட்டுவதற்குப் பெரும்பாலும் இந்த இடத்தையே பாவித்துவந்தார்கள். தற்போது இப்பகுதியில் முகாம் அமையுமிடத்து, கழிவுப் பொருட்களைக் கொட்டவும் இடமில்லாதநிலை ஏற்பட்டுள்ளது. (சு)

# கடற்தொழிலாளர் பிரச்சினை தீர்க்க ஒழுங்கான கூட்டமைப்பு அவசியம்

## சமாச கலந்துரையாடலில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சங்ககளுக்கும், வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத்திற்குமிடையில் கடற்தொழிலின் வளர்ச்சி பற்றிய கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இக்கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 11 மணிக்குச் சமாசத் தலைவர் தவரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

கடற்தொழில் சமாசத் தலைவர் உரையாற்றுகையில், குடாநாட்டில் அந்நிய மீனவர்களால் கடல்வளங்கள் அழிக்கப்பட்டுவருகின்றன. இதனால், எமது கடல்வளம் அருகிவரும் நிலையிலுள்ளது. கடல்வளம் அழிக்கப்படுவதனால் எமது சமுதாயமும் அழிந்துவிடும். அத்துடன், அந்நிய நாட்டு மீன்பிடித் தொழிலாளர்களாலும் நாம் வெகுவாகப் பாதிக்கப்படுகிறோம். நீண்டகாலமாகவே நாம் பழைய தொழில் முறைகளைக் கையாண்டு வருகிறோம். இனிவரும் காலங்களில் தொழில் வகைகளை விரிவுபடுத்தி, நவீன முறைகளைக் கையாள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கடற்தொழில் திணைக்களத்தினூடாக இந்த அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். அத்துடன், கடற்தொழில் சங்கங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, அவற்றின் மூலமும் அபிவிருத்திகளை மேற்கொள்ளவுள்ளோம்.

தற்போது பிடிக்கப்படுகின்ற மீன்களைச் சந்தைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளால் தொழில் செய்கிற நாம் பாதிக்கப்படுகிறோம். நாம் செய்கின்ற இத்தொழிலின் பலன்களை எந்தவகையில் கூட்டிக்கொள்ளலாம் என்பது பற்றியும் ஆராயப்படவேண்டும். இம்மீனவர்களுக்கிடையே இருக்கின்ற குறைபாடுகளை நீக்கி, சிறப்பான கட்டமைப்பிற்குட்பட்டதாக மாற்றவேண்டும் எனத் தமது உரையில் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் சகல கடற்தொழில் சங்கங்க ளின் தலைவர்களும், உறுப்பினர்களும் வலிகாமக் கடற்புலிகளின் பொறுப்பாளர் இனியவனும் கலந்துகொண்டனர். (ரா,சு)

# லொறி மோதியதில் இளைஞர் காயம்

(சரசாலை)

லொறி மோதியதால் காலில் படுகாயமடைந்த இளைஞன் ஒருவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முகமாலையில் இடம்பெற்ற இச்சம்பவத்தின்போது, பாலையூற்று - திருகோணமலையைச் சேர்ந்த குலராஜசிங்கம் சத்தியராஜ் (வயது 23) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் படுகாயமடைந்தநிலையில் சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு, பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

# பருத்தித்துறை படைத்தளத்தினுள் கட்டாக்காலி நாய்களை அழியுங்கள்

## படையினர் நகரசபையிடம் கோரிக்கை

படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் நிற்கின்ற கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை நகரசபையிடம் படையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பருத்தித்துறையிலுள்ள துறைமுகத்தையும், அதனை அண்மித்த கணிசமான பல பகுதிகளைக் கடந்த 5 வருடங்களிற்கு மேலாகப் படையினர் தமது அதியுயர் பாதுகாப்பு வலயமென இப்பகுதிகளைப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

பருத்தித்துறை நகரசபைத் தலைமையகத்திற்குச் சென்ற படையதிகாரிகள்- இப்பகுதிகளில் கட்டாக்காலியாக பெருமளவு நாய்கள் காணப்படுவதாகவும், உடனடியாக அவற்றைப் பிடித்து அழிக்க அல்லது சுட்டுக்கொல்ல நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளனர்.

# ரேடியோவை வாங்குவதாகக் கூறி அதனுடன் தலைமறைவான திருடன்

ரேப் றெக்கோடரை வாங்குவதுபோல் வீடொன்றிற்குச் சென்ற நபரொருவர், மேற்படி ரேப் றெக்கோடருடன் தந்திரமாகத் தப்பிச் சென்றுள்ளார்.

கொக்குவில் - நந்தாவில் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீடொன்றில் விற்பனைக்கென வைத்திருந்த ரேப் றெக்கோடரை, தான் வாங்கப்போவதாகக் கூறிய அந்நபர், அதனை ரேடியோ திருத்தும் கடையொன்றில் காட்டி வருவதாகச் சென்றார்.

பின்னர் நீண்ட நேரமாகியும் திரும்பி வராததன் பின்னரே உரிமையாளர் - அவர் தந்திரமாக ரேப் றெக்கோடரை திருடிச்சென்றதைப் புரிந்துகொண்டார்.

# கற்கோவள நலன்புரி நிலையத்தில் குடிநீர் இன்றி மக்கள் கஷ்டம்!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவிலுள்ள கற்கோவலம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்கள் குடிநீரைப் பெறுவதில் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நலன்புரிநிலைய வளாகத்தில் குடிநீர் கிணறோ அல்லது நீரைப் பெறும் வேறு வழிகளோ இல்லை. இதனால் அங்கு வசிக்கும் 24 குடும்பங்களும் - தனியார் வீடுகளிலேயே குடிநீரைப் பெற்று வந்தனர்.

தற்சமயம் அதுவும் உரிமையாளர்களால் மறிக்கப்பட்ட நிலையில், நீண்ட தூரம் நடந்து சென்று குடிநீரைப் பெற்று வருகின்றனர். இது தொடர்பாகப் பல தரப்பட்ட நிறுவனங்களிடம் அறிவித்தும், இதுவரை எதுவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியவில்லை என்று அம்மக்கள் கவலை தெரிவித்தனர். (சு)

## அரச சேவை ஆணைக்குழுவுக்குப் புகார்

# கல்விச்சேவை அதிகாரி ஒருவருக்கு நான்கு பதவிகளா?

சக உத்தியோகத்தர்களை அரசியல்ரீதியாக பழிவாங்கும் பொருட்டு, ஒரு அதிகாரிக்கு நான்கு பதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

பிரதேச கல்வித் திணைக்களப் பிரதிக்கல்விப் பணிப்பாளர், ஆசிரிய கல்விப் பரீட்சைக்கான கல்விப் பணிப்பாளர், பிரதேச கல்வித் திணைக்கள மேலதிகக் கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளையே ஒருவர் வகித்துவருதாகத் தெரியவந்துள்ளது.

கல்விச்சேவையில் 70 பேர் தகுதி உடையவர்கள் இருந்தும், ஒருவரை எப்படி இந்த நான்கு பதவிகளுக்கும் நியமிக்கமுடியும் எனவும் மனுவில் முறையிடப்பட்டுள்ளது.

# ஒரேயொரு ஆசிரியருடன் 109 பாடசாலைகள்!

150 இற்கும் குறைவான பிள்ளைகள் படிக்கும் 3829 பாடசாலைகள் நாட்டில் உள்ளதாக 2002 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சம்பந்தமான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி 50 பிள்ளைகளுக்குக் குறைவாகப் படிக்கும் பாடசாலைகளின் தொகை 1360 எனவும், 51 தொடக்கம் 100 பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகள் எண்ணிக்கை 1334 எனவும், 101 முதல் 150 வரை பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகள் 1135 எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஒரு ஆசிரியர் மட்டும் கடமைபுரியும் பாடசாலைகளின் தொகை 109 எனவும், இரு ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடசாலைகளின் தொகை 298 எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 327 பாடசாலைகள் அரசாங்கத்தால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொருளாதார நெருக்கடிகளுக்குள்

# மூழ்கித் தவிக்கிறது இலங்கை

## தெற்குத்திசையினிலே.....

### கொழும்பிலிருந்து இந்திரஜித்



விலையுயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் சம்பள உயர்வு கோரியும் தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்

நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்கிறது. நாளுக்கு நாள் எவ்வித மாற்றுத் தீர்வும் இன்றி வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து செல்வதால், மக்கள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஒரு வருடகாலமாக எவ்வித சம்பள உயர்வுமின்றி அரசாங்க ஊழியர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர். தனியார் ஊழியர்கள் ஓரளவு சம்பள உயர்வுகளைப் பெற்றிருந்தாலும், அது நடைமுறை வாழ்க்கையைக் கொண்டு நடத்தக்கூடிய நிலைக்குத் தீர்வாக அமையவில்லை என்ற குற்றச்சாட்டும் நிலவுகிறது.

நாட்டின் வளங்கள் உரியமுறையில் பயன்படுத்தப்பட்டு, அதன் மூலம் பெறப்படும் உற்பத்தி பூரணமாக அமையுமானால், பொருளாதார வளர்ச்சிக்கு வாய்ப்புண்டு. ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் கடந்த 20 வருடப்பகுதியில் போர் காரணமாக உற்பத்திக்கான வளங்கள் அழிக்கப்பட்டன. இதன் காரணமாக உள்நாட்டு உற்பத்தி பூரணமாகப் பூச்சியநிலையை நோக்கிச் சரிவடைந்து வருகிறது. மறுபுறத்தில் உலகமயக்கொள்கை அவசர அவசரமாக மேற்கொள்ளப்படுவதால், வெளிநாடுகளின் இறக்குமதிப் பொருட்கள் - இலங்கையின் சந்தையை நிரப்பிக் கொண்டிருக்கின்றன. இங்கு இரட்டைப் பாதிப்பு இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ளது. ஒன்று உள்நாட்டு உற்பத்தி குறைவினால் பொருளாதாரத்தில் தாக்கம் ஏற்பட்டு வரும் அதேநேரம், இரண்டாவதாகக் கூடிய விலையிலான வெளிநாட்டுப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதால் "பணவீக்க" நிலைமை உக்கிரமடைந்துள்ளது. "பணவீக்கம்", "பணச்சுருக்கம்" என்ற பொருளாதாரத் தன்மைகளில், தொடர்ச்சியாக 1977 ஆம் ஆண்டு காலப்பகுதியின் பின்னர் "பணவீக்கம்" தொடர்ந்து நிலைபெற்று வந்துள்ளது.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் உள்ளூர் உற்பத்தி கொள்கையின் போது, உள்ளூர் உற்பத்திகளுக்குச் சிறந்த வருமானப் பயன்பாடு கிடைத்தது. எனினும், மக்களால் தமக்குரிய பொருட்களை நிறைவாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதையடுத்து ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன உலகமயக் கொள்கையின் கீழ், இலங்கையின் பொருளாதாரத்தை "மூடிய" பொருளாதாரத்தில் இருந்து "திறந்த" பொருளாதாரமாக மாற்றியமைத்தார். இது உள்ளூர் உற்பத்தி வளங்களுக்குப் பாரியளவில் பாதிப்பை ஏற்படுத்தியபோதும், வெளிநாட்டுப் பொருட்களின் கவர்ச்சி இலங்கை மக்களை ஆட்கொண்டது. நாட்டின் பொருளாதாரம் - உள்நாட்டு உற்பத்தித் துறையில் வீழ்ச்சியை அடைந்து செல்லும்நிலை. பொருளாதார நிபுணர்களால் கண்டறியப்பட்டாலும், அவை பொதுமக்களுக்கு உரியமுறையில் கூறப்படவில்லை. மத்திய வங்கிகூட காலத்துக்குக் காலம் ஆட்சியிலிருக்கும் அரசாங்கங்களின் பொருளாதாரக் கொள்கைகளுக்குகேற்ப அந்த அரசாங்கங்களின் செயற்பாடுகளுக்கு உரியமுறையில் ஆலோசனைகளைக் கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு முன்பிருந்தே சுமத்தப்பட்டு வருகிறது. மத்திய வங்கியின் மாதாந்த அறிக்கைகள் மற்றும் ஆண்டறிக்கைகள், சிலவேளைகளில் அரசாங்கங்களின் ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதனை மையமாகக்கொண்டு தயாரிக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டுகளும் எழுப்பப்பட்டு வருகின்றன.

உள்நாட்டு உற்பத்தியில் கூடிய கவனம் செலுத்தப்படாமை, அதே வேளை, போர் ஒன்று இலக்கு இல்லாமல் நடத்தப்பட்டமை என்பன எவ்விதமான தாக்கங்களைக் கொண்டுவந்துள்ளன என்ற விடயம் தற்சமயம் இலங்கையில் உணரப்படுகின்றது. பொருளாதார வீழ்ச்சிக்காலங்களின்போதும், அதனை மக்கள் தெரிந்துகொள்ளக் கூடாது என்ற நோக்கில் மூடிமறைத்து சம்பள உயர்வுகளையும், ஏனைய வசதிகளையும் மாறிமாறி ஆட்சிக்கு வந்து அரசுகள் கொடுத்து வந்தன. இதன் தாக்கம் இன்று உணரப்படுகின்றது. தேர்தல் வாக்குறுதிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் பொருளாதாரத்தின் நிலைமையை மீறி, நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு, திறைசேரியினால் இவ்வாறான நிதியளிப்புக்கள் இடம்பெற்று வந்தன. இதன் காரணமாக நாட்டில் பாரிய பொருளாதாரச் சீரின்மை மேலோங்கியது. அது இன்றைய போர்நிறுத்தச் சூழ்நிலையில், மக்கள் மீது முழுமையான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இன்றும்கூட அரசு முன்னர் மேற்கொள்ளப்பட்டு வந்த திட்டமிடப்படாத பொருளாதார நிலைப்பாடுகள் தொடர்பில், மக்களுக்குப் பூரண விளக்கங்களைக் கொடுக்கவில்லை. எனவேதான் மக்கள், இன்றைய பொருளாதாரத் தாக்கத்திற்குரிய காரணங்களைத் தெரிந்து கொள்ளாமல் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தில்- பொருளாதாரத் துறை ஓரளவு திட்டமிட்ட அடிப்படையில் செயற்பாட்டைக் கொண்டிருந்தது.

அதாவது, யுத்தம் ஒன்று நீடித்தவேளையில் வடக்கு-கிழக்கைத் தவிர்ந்த, நாட்டின் ஏனைய பகுதிகளில் உற்பத்தி மற்றும் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் காரணமாகப் பாரிய பொருளாதாரப் பாதிப்புகள் ஓரளவு ஈடுசெய்யப்பட்டன எனினும், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் இலங்கை பொருளாதாரத்தில் சாதகமின்மைப் போக்கு நிலைபெற்றது எனலாம். சுமார் 5 வருடகாலப்பகுதி சமாதானம், பின்னர் போரின் மூலம் சமாதானம் என்ற கோட்பாடுகளுக்கு மத்தியில் கடத்தப்பட்டன. எனவே, பொருளாதாரம் மந்தநிலைக்குச் சென்றது. என்றாலும், நாட்டில் உற்பத்தியை - அதன்மூலம் பொருளாரத்தைப் பாதிக்கக்கூடிய கொடுமையான போர் ஒன்று தீவிரமடைந்தது. இதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரத் தளம்பல்களை மூடிமறைத்துக்கொண்டிருந்த வெளிநாட்டுக் கடன்கள் குறிப்பாக, உலக வங்கி மற்றும் உலக நாணய நிதியம் என்பவற்றின் ஒத்துழைப்புக்கள் குறைவடைந்தன.

எனினும், ஒத்துழைப்புக்கள் கிடைத்தபோது அவை இலங்கை மக்களின் நலன் கருதி அல்லது உலகவங்கியினதும், சர்வதேச நாணயநிதியத்தினதும் ஆலோசனையை அமுல்செய்ய வேண்டிய கட்டாயங்கள் இருந்தன. குறிப்பாகத் தனியார்மயக் கொள்கையை இலங்கை அரசுகளும், மககளும் விரும்பாமலேயே தம்முடன் இணைத்துக் கொண்டனர்.

இந்தியா போன்ற நாடுகள் இந்தத் தனியார்மயத் திட்டங்களைக் கட்டம் கட்டமாகவே தமது பொருளாதாரக் கட்டமைப்புக்குள் புகுத்தி வருகின்றன. ஆனால், இலங்கையைப் பொறுத்த வரையில் கட்டாயமான நிலையில், இந்த மாற்றங்கள் புகுத்திக் கொள்ளப்பட்டன. இதன் விளைவுகள் இன்று அரசாங்கத்தை அதிர வைத்துக்கொண்டிருக்கின்றன. இதுவரைகாலமும் இலங்கையில் இருந்துவந்த நிதியோட்ட மறைமுகத் தீர்க்கங்கள், தற்சமயம் நேரடித் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. இதன் வெளிப்பாடுகளே நாட்டில் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வரும் தொழிற்துறையினரின் போராட்டங்களாகும்.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்ததிலிருந்து, அது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாக மாறியது வரையில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட போராட்டங்கள் தொழிற்துறைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் பிரதான இடத்தைப் பெருந்தோட்டத் தொழிற்துறை பெற்றிருக்கிறது. பெருந்தோட்டத் தொழிற்துறை- மாறி மாறித்தனியார் மற்றும் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளன.

இன்று அந்தத்துறை மீண்டும் அரசாங்கத்தினால் மீளப்பொறுப்பேற்க முடியாதநிலையில் தனியாரிடம் வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, அங்கு சம்பளத்திட்டம் உட்படத் தொழிலுரிமைகள்கூட மறுக்கப்பட்டு வரும் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இதனைத் தடுத்து நிறுத்தமுடியாத நிலையில் அரசாங்கம் தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டிருக்கும் அளவிற்குச் சென்றிருக்கிறது.

ஏற்கனவே பெருந்தோட்டத் துறை - தனியாருக்கு 50 வருட குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அது தற்சமயம் 99 வருடங்களாக நீடிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்ய முடியாது, நிதி முடக்கத்தில் இருக்கும் அரசாங்கம், நிச்சயமாகத் தனியாரின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவே செய்யும். அதனை ஏற்றுக்கொள்ளாவிட்டால் தனியார் தோட்டத்துறையில் முதலீடுகள் வீழ்ச்சியடையக்கூடும். எனவே, தொழிலாளர்களின் சக்திமூலம் அவர்களின் உரிமைகள் மற்றும் சலுகைகள் என்பவற்றை உறுதிப்படுத்திக்கொள்ளும் தார்மீகப் பொறுப்பு பெருந்தோட்டத் தொழிற்சங்கங்களிடம் சென்றிருக்கின்றது.

மறுபுறத்தில் மின்சாரசபை ஊழியர்கள் உட்பட அரசாங்கக் கூட்டுத்தாபன மற்றும் திணைக்கள ஊழியர்கள் சம்பள உயர்வு கோரிப் போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர். இதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி அரசு - தீவிர நெருக்குதலுக்கு முகங்கொடுத்துள்ளது. அதேநேரம், சில அரச நிறுவனங்கள் தம்மைத் தனியார் மயப்படுத்தவேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளன. இதில் அரச வங்கித்துறையும் அடங்கும்.

இவ்வாறான பாரிய நெருக்குதலுக்குள் ஐக்கிய தேசியக்கட்சி அரசு எதிர்வரும் ஜுன் மாதம் ஜப்பான் மாநாட்டைப் பெரிதும் நம்பியிருக்கிறது. இலங்கையில் பொருளாதாரச் சீராக்கல்களை அங்கு கிடைக்கப்போகும் நிதியுதவிகளைக் கொண்டே மேற்கொள்ளமுடியும் என்ற நிலைப்பாட்டுக்கு அரசு வந்துள்ளது. (எனவேதான் ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலைக்கூட இலங்கை அரசு கண்டிக்காத நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது)

அதற்கான ஒரு முன்னெடுப்பாக அரசு பல்வேறு நாடுகளுடன் வியாபார முதலீடுகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்திவருகிறது. இதனடிப்படையில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் உட்பட்ட பல நாடுகளின் முதலீட்டாளர்கள் - இலங்கையில் தமது முதலீடுகளை மேற்கொள்ள வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர். இந்தியாவைப் பொறுத்தவரையில் ஏற்கனவே அதன் முதலீட்டாளர்கள் - இலங்கையில் காலூன்றிவிட்டனர். அமெரிக்காவிற்கும் - இலங்கைக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தம், அந்த நாட்டின் முதலீட்டாளர்களையும் - இலங்கைக்கு வரவழைக்கவிருக்கிறது. ஜப்பானைப் பொறுத்தவரையில், அந்த நாட்டின் முதலீடுகள்- இலங்கையில் மேலும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. இவையாவும் எதிர்வரும் ஜுன் மாதம் அளவிலேயே தீவிரமடையவிருக்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் இலங்கையில் அரசியல் மாற்றம் ஒன்றுக்கும் அடிததளம் இடப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்த உடன்பாடு, நாட்டின் இறைமையைப் பாதிப்பதாகச் சுட்டிக்காட்டி ஜனாதிபதி சந்திரிகா - ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை முடக்குவதற்கு முயற்சியை மேற்கொண்டுள்ளார். ஜனாதிபதி இதற்காக மக்கள் விடுதலை முன்னணியின் உதவியையும் பெற்றுள்ளார் என்றும், தேசிய இனப் பிரச்சினைத்தீர்வு விடயத்தில் ஜனாதிபதியின் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் இணக்கமின்மை தொடர்ந்து வருகிறது. இறுதியாகக் கடந்த வெள்ளிக்கிழமை இந்த இரண்டு கட்சிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களில் ஒப்பந்தம் செய்துகொள்ளக்கூடிய வகையில் முன்னேற்றம் காணப்படும் எனக் கூறப்பட்டபோதும், மீண்டும் ஒரு திகதிக்கு அந்தப் பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தொழில்துறை ஊழியர்களின் உடனடி பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வைக் காணுவது எனப்பிரதமர் தலைமையிலான அரசு ஆலோசித்து வருகிறது. இன்றைய நாட்டின் சூழ்நிலையைப் பொறுத்த வரையில் ஆட்சி மாற்றமல்ல, பொருளாதார ஸ்திரத் தன்மையே தேவையாகியுள்ளது. அதனை விரைவுபடுத்தக்கூடியவர் யார் என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். மீண்டும் ஒரு போர் மூண்டுவிடக்கூடாது என்பதும் மிகமுக்கிய நிலைப்பாடாகும். ⊗



தொழிலாளர்களின் சம்பள உயர்வு போராட்டத்தில் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தில் மூன்று நாட்கள் ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 11 ஆவது ஆண்டு விழா ஏப்ரல் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் திகதிகளில் கொண்டாடப்படவுள்ளது. இந்த நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராகப் ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஈ.ஆர். ஜான்ஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

முதல்நாள் அமர்வில் தாவரங்கள் இறைவனால் வழங்கப்பட்ட கொடை, பனை மரங்கள் தொடர்பான ஒரு ஆராய்வு என்ற தலைப்பிலான பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம் தங்கப்பதக்க விரிவுரையை, பிரதம விருந்தினர் ஜான்ஸ் நிகழ்த்தவுள்ளார்.

4 ஆம் திகதி இலங்கையின் சக்திப் பிரச்சினைகள் பற்றி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் கருத்துரையாற்றவுள்ளார்.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல் மூன்று அமெரிக்கப் படையினர் பலி!



வீதிச் சோதனையில் அமெரிக்கப் படையினர்

ஈராக்கின் நஜாவ் நகரிலுள்ள அமெரிக்கச் சோதனை நிலையம் மீது, ஈராக்கிய தற்கொலையாளி நடத்திய தாக்குதலில் குறைந்தது மூன்று அமெரிக்கப் படையினர் பலியானதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொதுமகன் ஒருவர் காரைச் செலுத்திவந்து சோதனைச்சாவடிக்கு அருகில் அதனை வெடிக்கவைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. முன்னதாக 5 படையினர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் சரியான விபரங்களை வெளியிட அமெரிக்க அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

சோதனைச் சாவடிக்கு அருகே தனது காரை நிறுத்திய நபர், அங்கு நின்ற அமெரிக்கப் படையினரை அருகே வருமாறு அழைத்துள்ளார். படையினர் நெருங்கிச் சென்றதும், அவர் காரை வெடிக்கச் செய்துள்ளார்.

இத்தகைய தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொள்ளவென நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் தயாராக இருப்பதாக, சில தினங்களுக்கு முன் ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் நஜிசப்ரி எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தாக்குதலே அமெரிக்கப் படையினர் ஈராக்கில் சந்தித்த முதல் தற்கொலைத் தாக்குதலாகும்.

# ஒரேமூச்சில் படைநகர்வு சாத்தியமானதொன்றல்ல

## பிரிட்டிஷ் ஜெனரல் தெரிவிப்பு



(லண்டன்)

படைநகர்வின்போது ஒரேமூச்சில் படைகளை முன்செலுத்த முடியாது. இடையிடையே படைகள் தரித்துநின்றே, பின்னர் முன்னேற முடியுமென பிரிட்டிஷ் இராணுவத்தின் மூத்த இராணுவ அதிகாரி ஜெனரல் சேர் மைக் ஜக்சன் நேற்று லண்டனில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஈராக்கில், அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளின் நகர்வு மிக மெதுவாகவே நடைபெறுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விளக்கமளித்தபோதே, ஜெனரல் ஜக்சன் இவ்வாறு குறிப்பிட்டார். ஈராக்கின் படைபலத்தினால் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் வியப்படைந்துள்ளன என வெளியான தகவல்களை அவர் மறுத்துள்ளார். பஸ்ராவில் தொடர்ந்து பிரிட்டிஷ் - ஈராக் படைகள் மோதுவதாகவும் அவர் தெரிவித்தார்.


உலகவலம்

### தவறுதலான தாக்குதலில் 2 பிரிட்டிஷ் வீரர்கள் பலி!

பஸ்ராவில் பிரிட்டிஷ் கவசப் படைத் தொடரணி மீது, அமெரிக்க தண்டர்போல்ட் விமானம் தவறுதலாக நடத்திய குண்டுவீச்சில், இரு பிரிட்டிஷ் படையினர் பலியாகினர். இந்தத் தாக்குதலோடு ஈராக்கில் பலியான பிரிட்டிஷ் படையினரின் தொகை 23 ஆக உயர்ந்துள்ளது.

# பக்தாத் சந்தைமீது மீண்டும் விமானங்கள் குண்டுவீச்சு!

## 58 பொதுமக்கள் உயிரிழப்பு



ஏ-10 தண்டர்போல்ட் விமானம்

பக்தாத் சந்தைப் பகுதி மீதான ஏவுகணை மற்றும் விமானத் தாக்குதலால் 58 ஈராக்கியப் பொதுமக்கள் பலியான சம்பவத்தின் சில மணி நேரத்தில், மீண்டும் இப்பகுதியில் கூட்டுப்படைகளின் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

இதேசமயம், பஸ்ராவில் 200 ஈராக்கியப் பராத் துருப்பினர் தங்கியுள்ளதாகக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து அங்கும் அமெரிக்க விமானப் படையின் எப்-15 விமானங்கள் தாக்குதல் நடாத்தியுள்ளன.

பக்தாத் சந்தையில் கொல்லப்பட்டவர்களில் அநேகர் பெண்கள், பிள்ளைகள், வயோதிபர்கள் என அபுதுபாய் தொலைக்காட்சி தெரிவித்தது. சந்தைப் பகுதி முழுவதும் இரத்தமும் கண்ணாடிச் சிதறல்களுமாகத் தோற்றமளிக்கிறது. தனது ஐந்து வயது மகனை இழந்த தந்தை ஒருவர், புஷ்ஷை இப்போது என் வாயாலேயே கடித்து உண்ண வேண்டும் போலுள்ளது என ஆத்திரத்துடன் கூறினார்.

# 10 படையினரின் சடலங்கள் பிரிட்டன் எடுத்துவரப்பட்டன



(பக்தாத்)

ஈராக்கில் பலியான பத்து பிரிட்டிஷ் படையினரின் சடலங்கள் அடங்கிய பிரேதப்பெட்டிகள் நேற்று ஒக்ஸ்போர்ட்ஷெயரில் உள்ள பிரிஸ் நோர்ட்டன் விமானப்படைத் தளத்துக்கு விமானத்தில் கொண்டுவரப்பட்டன.

பிரேதப்பெட்டிகள், பிரிட்டனின் யூனியன் ஜக் தேசியக்கொடிகளால் போர்த்தப்பட்டு, ஹேர்குலிஸ் சரக்கு விமானத்திலிருந்து இறக்கப்பட்டன.

இவை பின்னர் இறுதிச்சடங்குகளுக்காக உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. ஹெலிகொப்ரர் விபத்தில் கொல்லப்பட்ட 8 பிரிட்டிஷ் படையினரதும், பிரிட்டிஷ் போர் விமானம் ஒன்று அமெரிக்கரால் தவறுதலாகத் தாக்கப்பட்டதில் கொல்லப்பட்ட இரு பிரிட்டிஷ் விமானிகளினதும் சடலங்கள் இதில் அடங்கும்.

இதேசமயம், லண்டனில் போர் எதிர்ப்புப் பேரணியும், படையினரின் உறவினரால் போர் ஆதரவுப் பேரணியும் நடைபெறவுள்ளன.

# குவைத் மீதும் தாக்குதல்

குவைத் நகரில் உள்ள சந்தைத் தொகுதி மீது திடீரென வந்து வீழ்ந்த ஏவுகணையால் அப்பகுதியில் இருந்த சில கடைகள் சேதமுற்றன. சில குவைத்தியர்கள் காயமுற்றனர். குவைத் எமிர் ஷேக் அல் ஜபார் அல் சபாவின் மாளிகைக்கு அருகே இந்த சந்தைத் தொகுதி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



ஏவுகணை வீழ்ந்த இடம்

ஏவுகணை வீழ்ந்த இடத்தை ஆய்வு செய்த குவைத் தீயணைப்புப் படையினர், இந்த ஏவுகணை சிறியதெனவும், குறைந்த உயரத்தில் கடல் கடந்து வடக்குத் திசையிலிருந்து வந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளனர். இந்த ஏவுகணை வந்ததை எந்த ராடர் சாதனமும் கண்டறியவில்லை.

## சிரியாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

சிரியா தனது எல்லையூடாக இராணுவ உதவிகளை ஈராக்கிற்கு வழங்குவதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் எச்சரித்துள்ளார்.

சிரியாவின் இந்நடவடிக்கை ஆத்திரமூட்டும் செயல் என அவர் குறிப்பிட்டார். ஆனால், ரம்ஸ் பீல்ட்டின் குற்றச்சாட்டு ஆதாரமற்றதென சிரியா மறுத்துள்ளது. ஈராக்கிய சிவிலியன்கள் மீதான தனது தாக்குதலை மறைத்து திசைதிருப்பவே அமெரிக்கா இவ்வாறு கூறுவதாக சிரிய வெளியுறவு அமைச்சு தெரிவித்தது.

# ஈராக் போர்க்களம்

## பக்தாத் சந்தைப் பகுதியில் நடந்த பேரழிவுக் காட்சிகள்









நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## ஆட்களைக் கடத்தி...

பொதுமக்களுக்கும் இடையில் பெரும மோதல் ஏற்பட்டது. இதில் பொலிஸாரும் பொதுமக்களும் காய மடைந்தனர்.

இச்சம்பவம் நடந்த வீட்டிற்குச் சென்ற பொதுமக்கள் - அங்கிருந்த பொருட்களை அழித்து தமது கோபத்தை வெளிக்காட்டியபோதும்- பொலிஸ் உயர்மட்டத்தின் தலையீட்டினால் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் சிலவற்றிலிருந்தே - இந்த வீடு - சிறுநீரகங்களைப் பெறுவதற்காக கடத்திவரப்படுபவர்கள் தடுத்து வைக்கும் இடமாகவும் பயன்படுத்தப் பட்டுவந்தது தெரியவந்தது.

கொழும்பிலுள்ள பிரபல வைத்தியசாலைகளுக்கு - சிறுநீரகமாற்று அறுவைச் சிகிச்சைகளுக்காக இந்த வீட்டில் தடுத்து வைக்கப்படுவோரிடமிருந்து சிறுநீரகங்கள் பலவந்தமாகப் பெறப்பட்டதாகவும் - சிறுநீரகங்கள் பெறப்பட்ட பலர் கொல்லப் பட்டிருக்கலாமென்ற சந்தேகம் எழுந்திருப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்திற்குப் பின்னணியில் - கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த பிரபல ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே இருப்பதாகவும் அந்த மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகள் தற்போது சி.ஐ.டி. பிரிவுக்கு மாற்றப் பட்டுள்ளன. சி.ஐ.டி.யைச் சேர்ந்த உயரதிகாரிகள் குழுவொன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் நேற்று தனது விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறது.

சிறுமி அடைத்துத் துன்புறுத்தப் பட்ட வீட்டை உடைத்து - அச்சிறுமியை மீட்க பொதுமக்கள் முனைந்தபோது - அதனைத் தடுத்து, தாக்குதல் நடாத்திய பொலிஸார் - முதலில் உடனடி இடமாற்றத்திற்கு உத்தரவிடப்பட்டனராயினும் - நிலைமை தீவிரமடைந்ததாலும், பின்னணி மேலும் சிக்கலாயிருப்பது தெரியவந்ததாலும் - பதவிகளிலிருந்து இடைநிறுத்தப்படும் உத்தரவு அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இது இவ்வாறிருக்க - குறித்த விசாரணைகளை திசைதிருப்புமாறு- இந்த விவகாரத்தைக் கையாளும் அமைச்சருக்கு - பிரச்சினையில் சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அழுத்தம் கொடுத்துவருவதாக- ஐ.தே.க வுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவங்களால் - கொட்டாஞ்சேனை, கிராண்ட்பாஸ் பகுதிகளுட்பட கொழும்பின் பல பாகங்களிலும் அச்சமும் பதற்றமும் மக்களிடையே பரவியுள்ளதையும் அவதானிக்க முடிந்ததாக நமது நிருபர்- சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று தகவல்களைத் திரட்டியதும் அறிவித்தார். (200,01)

## அரசியல்...

தம்பி பரமேஸ்வரன், ராசதுரை ஜீவானந்தன், கணேசமூர்த்தி பிரகலாதன், செல்விகள் சோமசுந்தரம் லோகரஜனி, பியவர்த்தனா ரேவதி, கார்த்திகேயன் சுபைதா, சிவானந்த குரு மோகனா, சின்னத்தம்பி சிறிதேவி, கணபதிப்பிள்ளை வினோதினி (இங்கிலாந்து), சூசைப்பிள்ளை டேவிற் அன்ரன் தவராஜ் (சுவிஸ்), நேரு குணரட்ணம் (கனடா), பாஸ்கரன் (நோர்வே).

இவர்கள் நோர்வே, சுவீடன், பின்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளுக்குச் சென்று அந்த நாடுகளில் உள்ள சமஷ்டி ஆட்சிமுறை பற்றி ஆராயவுள்ளனர்.

### தென்மராட்சியில் பொலிஸார் நடாத்திய

# போராளி மீதான தாக்குதல் குறித்து கண்காணிப்புக்குழுவிடம் முறையீடு

தென்மராட்சி பிரதேசத்தில் அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சி அரசியற்துறை அலுவலகத்தைச் சேர்ந்த, இசையாணன் என்ற போராளியே தாக்கப்பட்டுள்ளதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்பு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கொடிகாமம் கச்சாய்ப் பகுதியில் அரசியற்பணியில் ஈடுபட்டிருந்த வேளை, வீதியில் வழிமறித்த பொலிஸார் ஒருவர் இவரை மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளார் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி சம்பவம் அப்பட்டமான யுத்த நிறுத்தமீறல் என, விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது. (லி)

### காணாமற்போனோர் விசாரணை

# ஆணைக்குழுவினர் வராததால் பொதுமக்கள் மத்தியில் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் மனித உரிமை ஆணைக் குழுவின் விசாரணைக் குழுவினர், நேற்று யாழ். வராததால் விசாரணைக்கென வந்த மக்கள் ஏமாற்றத் துடன் திரும்பினர்.

விசாரணைகளை மேற்கொள்வதற்காக நேற்று வருகை தருவதாக மேற்படி விசாரணைக் குழுவினர் அறிவித்ததால், பல மக்கள் விசாரணைக்கென மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்திற்குச் சென்றிருந்தனர்.

## பிரசவ வலியால்...

மருத்துவ உதவிகளைச் செய்தார்.

தாயும் சேயும் தற்போது நலமாக உள்ளனர். மருத்துவப் போராளி தக்க சமயத்தில் உரியவாறு சிகிச்சையளித்துத் தாயையும் சேயையும் காப்பாற்றியதற்கு மக்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.

## சினி யாத்ரா கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் சினி யாத்ரா திரைப்பட விழாவின் இறுதி நாள் படக்காட்சியும், திரையிடப்பட்ட திரைப்படங்களின் இயக்குநர்களுடனான கலந்துரையாடலும் இன்று நடைபெறவுள்ளது.

இன்றுகாலை 10 மணிக்கு தர்சிறி பண்டாரநாயக்கா நெறியாள்கை செய்த பவதுக்க பாகம் 1, பிற்பகல் 2 மணிக்கு பவதுக்க பாகம் 2 ஆகியன திரையிடப்படும்.

இறுதியாக 4.30 மணிக்கு திரைப் படங்கள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (ச)

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்
Best Bank in Srilanka
Institute of Informatics Studies
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்
பூபாலசிங்கம் புத்தகசாலை
Elephant house
Necto
அனுசரணையில்
நமது ஈழநாடு நடாத்தும்
க.பொ.த (உயர்தரம்) 2003
வர்த்தகப் பிரிவுக்கான
மாபெரும் இலவச முன்னோடிக் கருத்தரங்கு
விபரங்கள் விரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்

ராம்கோ சீமெந்து
RAMCO CEMENT
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
ராம்கோ சீமெந்து
31.03.03 திங்கட்கிழமை பருத்தித்துறை
துறைமுகத்தை வந்தடையவுள்ளது.
தேவையானோர் முன்கூட்டியே
பதிவுசெய்யவும்.
தொடர்புகளுக்கு:-
ஈஸ்வர பகவான் அன் கம்பனி
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021-2222356
(சி-727)

வீட்டில் இருந்தே ஆங்கிலம் கற்று Diploma சான்றிதழ் ஒன்றை பெற நீங்கள் தயாரா?
தபால் மூலம் ஆங்கில பாடநெறி — SPOKEN ENGLISH BY POST
சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க 90 நாட்களில் பயிற்சி அளிக்கப்படும்

ஏன் யோசிக்கிறீங்க?
உங்களாலும் ஆங்கிலத்தில்
பேசமுடியும்.
இலவசம் - FREE
பாடநெறியை தொடர விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பின்வருவன இலவசமாக வழங்கப்படும்
★ ஆங்கில தமிழ் அகராதி
★ -சிங்கள பேச்சு பயிற்சி பாடநெறி
★ அழகிய Bag ஒன்று
மேலதிக விபரங்களை
Telephone மூலம்பெற
அழையுங்கள்
08-201433
→ மேலதிக விபரங்களை தபால் மூலம் பெற நீள கடிதவுறையை அனுப்பவும்
J.E.I.INSTITUTE,P.O.BOX.119.KANDY
(சி-726)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.